# திருப்பூர் மாநகராட்சி

**2019 அக்டோபர் மாதம் 11-ந் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண். 709 முதல்716 வரை**

**17-10-2019-ந் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண். 717 முதல்731 வரை**

**31-10-2019-ந் தேதி நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எண். 732 முதல்748**

## திருப்பூர் மாநகராட்சி

**2019 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 11ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திரு.க.சிவகுமார், எம்.ஏ.,**

**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி.**

******

709) திருப்பூர் மாநகராட்சியில் அம்ரூத் திட்டம் 2017-18-ல் குடிநீர் திட்டம் சிப்பம் எண்.1-ல் மேட்டுப்பாளையம் தலைமை நீரேற்று நிலையத்தில் Intake well கட்டுமானப் பணிக்கு இடையூறாக உள்ள பட்டியலில் கண்டுள்ள 44 எண்ணிக்கை மரங்களை வெட்டி அப்புறப்படுத்த வேண்டியுள்ளது. 44 எண்ணிக்கை மரங்களை பொது ஏலம் நடத்தி வெட்டி அப்புறப்படுத்தவும் வெட்டப்படும் மரத்திற்கு ஈடாக இருமடங்கு மரக்கன்றுகள் நட்டு பராமரித்து வரவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1. அனுமதி வழங்கலாம்.
2. அம்ரூத் திட்டத்தில் Intake well கட்டுமானப் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி தொடரப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம். (இ.1 / 4814 / 2017 - 1 )

------

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-------

710) தனிவட்டாட்சியர் சமூக பாதுகாப்புத் திட்டம், திருப்பூர் வடக்கு அவர்களின் ந.க.எண். 0028 / 2019 / சி.1, நாள் 30-09-2019-ம் தேதிய கடிதத்தின்படி இந்திரா காந்தி முதியோர் உதவித் தொகை, விதவைகளுக்கான உதவித் தொகை ஆகிய திட்டங்களின் மூலம் உதவித் தொகை வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு குறைதீர்க்கும் முகாமில் மனு அளித்தவர்களில் 252 நபர்களுக்கு சம்மந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர்கள் புலதணிக்கை செய்து ஒய்வூதியம் வழங்க தேர்வு செய்யப்பட்டு மாநகராட்சியில் உள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியலில் சேர்த்து புதிய வரிசை எண் வழங்கி அனுப்பும்படி கேட்டுள்ளார்.

தற்போது மாநகராட்சியில் உள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியலில் வட்டாட்சியர், சமூக பாதுகாப்புத் திட்டம், திருப்பூர் அவர்களால் அனுப்பப்பட்ட 252 நபர்களுக்கு பட்டியலில் பெயர் இடம் பெறாததால் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியலில் சேர்த்து புதிய வரிசை எண் வழங்க மாமன்றப் பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியலில் புதிய வரிசை எண் வழங்குவதை மேற்கண்ட இத்திட்டத்திற்கு மட்டும் பயன்படுத்த ஒப்புதல் அளிக்கலாம். ( ந.க.எண். எச்.2 / 505 / 2010 )

--------

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-------

**711)** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-5 அவர்களின் D.O,.கடித எண். 1588/2015/ஜே.1, நாள்-15.06,2015,28-03-2016 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5 அவர்களின் கடித ந.க.எண்.2571/J1/2017 நாள் 14-02-2017ன் படி திருப்பூர் மாநகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் மற்றும் இதர கொசுவினால் பரவும் நோயினை கட்டுப்படுத்த தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே பார்வையில் கண்டுள்ள உத்திரவில் 300 குடும்பங்களுக்கு ஒரு கொசு தடுப்பு பணியாளர் (DBC)வீதம் தற்காலிகமாக நிர்ணயம் செய்ய உத்திரவிடப்பட்டு உள்ளது. இம்மாநகராட்சியில் 60 வார்டு பகுதிகளிலும் கொசு தடுப்பு பணியினை மேற்கொள்ள மலேரியா பணியாளர்கள் பற்றாக்குறையாக இருப்பதாலும், தற்போது டெங்கு நோய் பரவாமல் கட்டுப்படுத்த தினமும் மாநகராட்சி பகுதியில் உள்ள அரசு / தனியார் மருத்துவமனைகளிலிருந்து தினசரி காய்ச்சல் கண்டவர்களின் பட்டியல் பெறப்பட்டு ஆறுநாள் வட்ட சுழற்சி அடிப்படையில் பணிபுரிய ஏதுவாக மண்டலம் ஒன்றிற்கு நாளொன்றுக்கு 125 நபர்கள் வீதம் நான்கு மண்டலங்களுக்கு தினசரி மொத்தம் 500 DBC பணியாளர்களை அவசர அவசியம் கருதி பொது சுகாதார நலனை முன்னிட்டு 01-10-2019 முதல் 31-10-2019 வரையுள்ள காலத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் ( நாள் ஒன்றுக்கு ரூ.286/-) மகளிர் சுயஉதவிக்குழு பணியாளர்கள் / இதர தற்காலிக பணியாளர்களை கொண்டு மேற்படி பணிக்கு அமர்த்தி பணிபுரிய நிர்வாக அனுமதியும் மற்றும் இதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.39.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1. செலவீனத்திற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. இம்மாநகரில் டெங்கு காய்ச்சல் மற்றும் இதர கொசுவினால் பரவும் நோயினை கட்டுப்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அவசர அவசியம் கருதி 01-10-2019 முதல் 31-10-2019 வரையுள்ள காலத்திற்கு மட்டும் தினக்கூலி அடிப்படையில் தினசரி 500 DBC பணியாளர்களை பணியமர்த்த மாமன்றம் அனுமதிக்கலாம். ( எச்.1 / 0617 / 2019 )

------

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-------

**712)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் 1,3 மற்றும் 4 பகுதிகளில் அமைந்துள்ள கழிவுநீர் கால்வாய்கள் ஆங்காங்கே அடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் செல்ல முடியாமல் தேங்கி இருப்பதால் கொசு உற்பத்தியாகி தொற்றுநோய்கள் பரவும் வாய்ப்பு இருப்பதாகவும் இதனை உடன் சரி செய்து கழிவுநீர் தேங்காமல் செல்ல ஏதுவாக அவசர அவசியம் கருதி பொது சுகாதார நலனை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் துப்புரவு பணியாளர்களை அமர்த்தி மேற்படி பணிகளை மேற்கொள்ளலாம் என மாநகர் நல அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்ததின் பேரில் அதற்கு ஆணையர் / தனி அலுவலர் அவர்கள் 29-07-2019ந் தேதியில் மேற்படி பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்டவாறு கழிவுநீர் கால்வாய் சுத்தம் செய்ய தற்போது துப்புரவு பணியாளர்களின் பணியிடங்கள் காலியாக இருப்பதை கருத்திற்கொண்டு ஒப்பந்த அடிப்படையில் வெளிச்சந்தை முறையில் தினசரி 125 துப்புரவு பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் 01-08-2019 முதல் 30-11-2019 வரையுள்ள

**712-ன் தொடர்ச்சி**

120நாட்களுக்கு பணியமர்த்தவும் இதற்கு செலவீனம் ரூ.56.00இலட்சத்திற்கு 28-07-2016-ந் தேதிய ஏற்கனவே பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் திருவாளர்கள். ஸ்ரீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் பிரைவேட் லிமிடெட், சென்னை நிறுவனத்தின் கொடுத்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தின் அடிப்படையில் 01-08-2019 முதல் 30-11-2019 வரையுள்ள 120 நாட்களுக்கு மேற்படி ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கவும், அதற்காகும் செலவீனம் ரூ.56.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

அவசர அவசியம் கருதி பொது சுகாதார நலனை முன்னிட்டு தினசரி 125 துப்புரவு பணியாளர்களை ஏற்கனவே 28-07-2016-ந் தேதியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் ஒப்பந்ததாரர் மூலம் 01-08-2019 முதல் 30-11-2019 வரையுள்ள 120 நாட்களுக்கு பணியமர்த்தி கொள்ள நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றம் அனுமதிக்கலாம். ( எச்.1 / 5578 / 2019)

-------

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-------

**713)** மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிக்கையின்படி இம்மாநகராட்சி பகுதியில் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு சிறப்பு நிதி உதவியாக ரூ.2000/- வழங்கும் திட்டத்தை தமிழ்நாடு அரசு இணையதளத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள பயனாளிகளின் எண்ணிக்கை 100114 படிவங்களை பதிவிறக்கம் செய்து அதனை களஆய்வு மேற்கொண்டு சரிபார்க்கப்பட்டு தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளின் விபரத்தினை அரசு இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 17464/2018/ UPAI நாள் 03-07-2019ம் தேதிய சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே இப்பணியினை உடன் மேற்கொள்ள வேண்டி இருப்பதால் இப்பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள கால அவகாசம் இல்லாததால் அவசர அவசியம் கருதி அரசு திட்டத்தினை விரைவில் அமல்படுத்த ஏதுவாக ஏற்கனவே 08-03-2019-ந் தேதியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அடிப்படையின் அதே விலை விகிதத்தில் ஒப்பந்ததாரர் Master Mind Engineering & IT Contractor, அவினாசி என்ற நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ள அனுமதியும் மற்றும் உத்தேச செலவீனம் ரூ.6.00/- இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

அவசர அவசியம் கருதி ஏற்கனவே 08.03.2019-ந் தேதியில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் ஒப்பந்ததாரர். Master Mind Engineering & IT Contractor, அவினாசி என்ற நிறுவனத்தின் மூலம் மேற்படி பணி மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

( எச்.1 / 744 / 2019)

------

**தீர்மானம் : அலுவலகக்குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-------

**714)** திருப்பூர் மாநகராட்சி எல்லைக்குள் குடிநீர் பற்றாக்குறையுள்ள இடங்களுக்கும், சத்துணவு மையங்களுக்கும், குடிசை பகுதிகளிலும் அவ்வப்போது குடிநீர் தேவைப்படும் இடங்களுக்கும் வாடகை லாரிகள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மாநகரில் அம்ரூத் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் குடிநீர் விநியோக மேம்பாட்டு பணிகள் முடிவடையும் வரையில் லாரி மூலம் குடிநீர் விநியோகம் தேவைப்படுவதால் 01.12.2018ம் தேதி முதல் ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த

**714-ன் தொடர்ச்சி**

அடிப்படையில் வாடகை லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய 26.11.2018ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த விலை ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு எம்.அப்புசாமி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டு பணி உத்திரவு 30.11.2018ம் தேதி வழங்கப்பட்டு குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது. எனவே 01.10.2019 முதல் 31.10.2019 வரை மாநகரில் குடிநீர் விநியோகம் லாரிகள் மூலம் செய்ய ஒரு மாத காலத்திற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.17.50 இலட்சத்திற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மாமன்றம் அனுமதி வழங்கலாம். ( இ.1 / 5247 / 2018 )

------

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.

-------

**715)** திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை நான்கு மண்டலங்களில் ஆங்காங்கே உள்ள தனியார் பாறைகுழிகளில் கொட்டப்பட்டு வருகிறது. மேற்படி பாறைக்குழிகளை சுற்றிலும் குடியிருப்பு பகுதிகள் அமைத்து இருப்பதால் பாறைக்குழியில் கொட்டப்படும் குப்பை கழிவுகளிலிருந்து ஏற்படும் துர்நாற்றத்தால் பொது சுகாதாரம் பாதிக்கப்படுவதாக பொது மக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. மாநகராட்சியில் பராமரிக்கப்படும் நுண்உரமாக்கும் மையத்தினை தூய்மையாக பராமரிக்க பொது சுகாதார நலனை கருதி மேற்கண்ட பகுதிகளில் ஏற்படும் துர்நாற்றத்தை கட்டுப்படுத்தும் பணிக்கு பயன்படுத்தும் லெமன் கிராஸ் ஆயில் மருந்து ( Lemon Gross Oil) 300 லிட்டர் தேவைப்படுவதை வாங்க 10.10.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அதன் விபரம்

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை ( 1 லிட்டருக்கு) ரூ. | ஒப்பந்தப்புள்ளி தொகை ( 300 லிட்டருக்கு) ரூ. | வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1 | M/s.Sri Ragavendra Industries, 9-138-5, Panchu Godown Street, Kamaraj Nagar, Elavamalai (P), Erode - 638 316 | 3304/- | 991200/- | Exemption |
| 2 | M/s. Maruthi General Industries, 45, Devepuram, Bhavani,Erode (D) | 3298/- | 989400/- | Exemption |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த திருவாளர். Maruthi General Industries, 45, Devepuram, Bhavani, Erode (D) என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.9,89,400/- என்பது உள்ளூர் சந்தை நிலவரப்படி உள்ளதால் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அவசர அவசியம் கருதி மேற்படி மருந்து பொது சுகாதார பணிக்கு தேவைப்படுவதால் மேற்கண்டவாறு வரப்பெற்ற குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர். Maruthi General Industries, 45, Devapuram, Bhavani, Erode (D) என்ற நிறுவனத்திற்கு விநியோக உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்கொண்மைக்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம். ( எச்.1 / 4269 / 2019)

- - - - - -

## தீர்மானம் : அலுவலகக்குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

-------

**716)** திருப்பூர் மாநகராட்சியில் 2015-16 ஆம் ஆண்டு வரை மேற்கொண்ட பணிகளின் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட 1 சதவீதம் மற்றும் 5 சதவீதம் தொகைகளை திரும்ப வழங்கக் கோரி கீழ்க்கண்ட ஒப்பந்ததாரர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

மேற்படி ஒப்பந்ததாரர்கள் பணி செய்து முடித்து 3 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதால் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகைகள் காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிற்கு கொண்டு செல்லப்பட்டுவிட்டது. எனவே கீழ்க்கண்ட வைப்புத்தொகைகளை திரும்ப வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

திருவாளர்கள்

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை ரூ. | | வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை ரூ. | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | மதுரா | .. | 13400.00 | 9. | ஆர்.கிருஷ்ணன் | .. | 145040.00 |
| 2. | ஜெயபிரகாஷ் | .. | 78000.00 | 10. | ஆர்.நாகராஜன் | .. | 134000.00 |
| 3. | M. பழனிச்சாமி | .. | 220000.00 | 11. | ஸ்ரீகிருஷ்ணா புரமோட்டார்ஸ் | .. | 155000.00 |
| 4. | K. லோகநாதன் | .. | 265000.00 | 12. | V.R. முருகன் | .. | 29500.00 |
| 5. | V. மணி | .. | 3500.00 | 13. | ஸ்ரீராம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் | .. | 7000.00 |
| 6. | R. முத்துசாமி | .. | 66000.00 | 14. | V.P.ராமசாமி | .. | 459000.00 |
| 7. | நித்தியானந்தன் | .. | 54634.00 | 15. | R. சிவகுமார் | .. | 250000.00 |
| 8. | ஸ்ரீவேலவன் கன்ஸ்ட்ரக்சன்ஸ் | .. | 40000.00 | | | | |

**அலுவலகக் குறிப்பு** : அனுமதி வழங்கலாம்.

( பி.5 / 5763 / 2019)

-------

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

-------

(ஒம்) க.சிவகுமார், எம்.ஏ.,
தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையருக்காக,
திருப்பூர் மாநகராட்சி.

**716-ன் பட்டியல் இணைப்பு**

திருப்பூர் மாநகராட்சி
சீர் மிகு நகரம் திட்டம் ( SMART CITY PROJECT )-4-வது குடிநீர் திட்டம்
மேட்டுப்பாளையம் தலைமை நீரேற்று நிலையத்தில் கட்டுமானப் பணிக்கு
இடையூறாக உள்ள மரங்களின் பட்டியல்.

| வரிசை எண். | மரத்தின் பெயர் | | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1) | அசோக மரம் | Polylthia | 1 |
| 2) | இலவம் பஞ்சு மரம் | Kapok | 1 |
| 3) | பாதாம் மரம் | Almond tree | 1 |
| 4) | இலவம் பஞ்சு மரம் | Kapok | 1 |
| 5) | இலவம் பஞ்சு மரம் | Kapok | 1 |
| 6) | வேப்ப மரம் | Neem tree | 1 |
| 7) | நெல்லி மரம் | Nelli tree | 1 |
| 8) | ஆய மரம் | Kapok | 1 |
| 9) | பனை மரம் | Palm tree | 1 |
| 10) | பனை மரம் | Palm tree | 1 |
| 11) | வேப்ப மரம் | Neem tree | 1 |
| 12) | தென்னை மரம் | Coconut tree | 1 |
| 13) | நெல்லி மரம் | Nelli tree | 1 |
| 14) | வேப்ப மரம் | Neem Tree | 1 |
| 15) | நாவல் மரம் | Black berries | 1 |
| 16) | பாதாம் மரம் | Almond tree | 1 |
| 17) | பாதாம் மரம் | Almond tree | 1 |
| 18) | தனக்கு மரம் | Tanakku tree | 1 |
| 19) | நெல்லி மரம் | Neeli tree | 1 |
| 20) | நொச்சி மரம் | Nochi tree | 1 |
| 21) | மா மரம் | Mango tree | 1 |
| 22) | பாதாம் மரம் | Almond tree | 1 |
| 23) | வேப்ப மரம் | Neem tree | 1 |
| 24) | நாவல் மரம் | Black berries | 1 |
| 25) | தென்னை மரம் | Coconut tree | 1 |
| 26) | தென்னை மரம் | Coconut tree | 1 |
| 27) | இலவம் பஞ்சு மரம் | Kapok | 1 |
| 28) | தைல மரம் | Ukipatus tree | 1 |
| 29) | தென்னை மரம் | Coconut tree | 1 |
| 30) | வேப்ப மரம் | Neem tree | 1 |
| 31) | தென்னை மரம் | Coconut tree | 1 |
| 32) | இலவம் பஞ்சு மரம் | Kapok | 1 |
| 33) | வேப்ப மரம் | Neem tree | 1 |
| 34) | வேப்ப மரம் | Neem tree | 1 |
| 35) | அசோக மரம் | Polylthia | 1 |
| 36) | அசோக மரம் | Polylthia | 1 |
| 37) | அசோக மரம் | Polylthia | 1 |
| 38) | வேப்ப மரம் | Neem tree | 1 |
| 39) | தைல மரம் | Uklipatus tree | 1 |
| 40) | அசோக மரம் | Polylthia | 1 |
| 41) | மா மரம் | Mango tree | 1 |
| 42) | பாதாம் மரம் | Almond tree | 1 |
| 43) | பாதாம் மரம் | Almond tree | 1 |
| 44) | கரட்டா மரம் | Kartta | 1 |
| | மொத்தம் | | 44 |

| வரிசை எண். | மரத்தின் பெயர் | | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1) | அசோக மரம் | Polylthia | 5 |
| 2) | இலவம் பஞ்சு மரம் | Kapok | 7 |
| 3) | பாதாம் மரம் | Almond tree | 5 |
| 4) | பனை மரம் | Palm tree | 2 |
| 5) | நெல்லி மரம் | Nelli tree | 3 |
| 6) | வேப்ப மரம் | Neem tree | 8 |
| 7) | நாவல் மரம் | Black berries | 2 |
| 8) | நொச்சி மரம் | Nochi tree | 1 |
| 9) | தென்னை மரம் | Coconut tree | 5 |
| 10) | மா மரம் | Mango tree | 2 |
| 11) | தனக்கு மரம் | Tanakku tree | 1 |
| 12) | தைல மரம் | Uklipatus tree | 2 |
| 13) | கரட்டா மரம் | Kartta | 1 |
| | மொத்தம் | | **44** |

தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி.

## திருப்பூர் மாநகராட்சி

**2019 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திரு.க.சிவகுமார், எம்.ஏ.,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி.**

******

**717)** திருப்பூர் மாவட்டம், திருப்பூர் தெற்கு வட்டம், சர்வே வார்டு- 'O' , பிளாக் எண்.11 நகரளவு எண்.18/1, மற்றும் நல்லூர் கிராமம் புல எண்.707 / பி.1 ஆகிய காலைகளில் திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி அமைத்திட உத்தேசிக்கப்பட்டு மாவட்ட ஆட்சியரால் உரிய முன் மொழிவுகள் ந.க.எண்.9423/2009/ஆ.1,நாள்-16-10-2009-ஆம் தேதிய கடிதத்தில் அரசிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட உத்தேசங்களில் தேர்வு செய்யப்பட்ட புலங்கள் நகரளவு எண்.18/1, (சர்வே வார்டு- 'O', பிளாக் எண்.11 )மற்றும் நல்லூர் கிராமம் புல எண்.707 / பி.1 ஆகிய காலையில் கிராம ஆவணங்களின்படி முறையே " **அரசு மருத்துவமனை"** மற்றும் " **தலைவர் திருப்பூர் முனிசிபல் கவுன்சில்** " என தாக்கலாகியுள்ளது.

நல்லூர் கிராமம் க.ச.எண். 707 / B.1 புலஎண்ணில் 3.28 ஏக்கர் ( 1.328 ஹெக்டேர்) இடமானது திருப்பூர் மாநகராட்சிக்கு சொந்தமானது ஆகும். அரசாணை (நிலை) எண். 730, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை நாள் 14-04-1976-ல் மாநகராட்சிக்கு சொந்தமான பட்டா நிலங்களை பிற' துறைகளுக்கு எந்த அடிப்படையிலும் வழங்க முழுமையான தடையாணை விதிக்கப்பட்டுள்ள நிலையினை கருத்தில் கொண்டும். அரசாணை (நிலை) எண்.35, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 17-02-1997 பத்தி (3)(அ)ன்படி நகராட்சி மற்றும் மாநகராட்சி மன்றங்களுக்கு சொந்தமான பட்டா நிலமாக இருக்குமேயானால் அது எந்த அரசு மற்றும் அரசு துறை சார்ந்த நிறுவனத்திற்கு தேவையானாலும் அதனை அப்போதைய சந்தை மதிப்பு (Market Value at the rate) அடிப்படையில் தான் கொடுக்க வேண்டும் எந்த நிபந்தனையில் அடிப்படையில் அரசின் உத்திரவு பெற்று 3.28 ஏக்கர் நிலத்தினை மருத்துவ கல்லூரி அமைத்திட சுகாதார துறைக்கு வழங்கிட தக்க உத்திரவு வழங்க அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பி வைக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

மாநகராட்சி பிற்கால பொதுப் பயன்பாட்டு நில தேவைகள் இந்நிலத்தின் மதிப்பு மற்றும் அரசாணை (நிலை) எண்.730 ஆகியவற்றை கருத்தில் கொண்டு மாநகராட்சிக்கு நிலம், அதில் உருவாக்கப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் நிதி இழப்பு ஏதுமின்றி அரசால் நிர்ணயிக்கப்படும் நில மதிப்பீட்டின் அடிப்படையில் திருப்பூர் அரசு மருத்துவ கல்லூரி அமைத்திட நல்லூர் கிராமம் க.ச.எண்.707 / பி1ல் 3.28 ஏக்கர் மட்டும் மாநகராட்சிக்கு எவ்வகையிலும் இழப்பு ஏதுமின்றி கேட்பு துறையான சுகாதார துறைக்கு அரசின் முடிவின் அடிப்படையில் வழங்க அரசுக்கு கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம். (**இ.3 / 5891 / 2019 )**

--------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-------

**718)** திருப்பூர் மாநகராட்சியில் அம்ரூத் திட்டம் 2017-18-ல் குடிநீர்த் திட்டம் சிப்பம் எண்.1-ல் மேட்டுப்பாளையம் தலைமை நீரேற்று நிலையத்தில் Intake well கட்டுமானப் பணிக்கு இடையூறாக உள்ள 44 எண்ணிக்கை மரங்களை வெட்டி அப்புறப்படுத்த மாநகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களிடம் 01-10-2018 அன்று ஒப்புதல் பெறப்பட்டு 09-10-2019 அன்று பொது ஏலம் நடத்தப்பட்டது. இதில் கலந்து கொண்ட 21 நபர்களில் திரு. S. அப்துல் ரசாக், த/பெ. சாந்து முகமது, 171, எஸ்.எம்.நகர், நெல்லித்துறை ரோடு, மேட்டுப்பாளையம் அவர்கள், ரூ.52,900.00 அதிகபட்ச ஏலக்கேள்வி கோரியுள்ளார். இத்தொகை உள்ளூர் சந்தை நிலவரப்படி உள்ளது. இவர் GST வரி 18% ரூ.9550.00 சேர்த்து மொத்தம் சேர்த்து மொத்தம் ரூ. 62,450/- மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தியுள்ளார். மேற்கண்ட ஏலக்கேள்வி தொகையை உறுதி செய்ய மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1) அனுமதி வழங்கலாம்.
2) அம்ரூத் திட்டத்தில் மேட்டுப்பாளையம் தலைமை நீரேற்று நிலையத்தில் Intake well கட்டுமானப் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி தொடரப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

( இ.1 / 4814 / 2017 -1 )

- - - - -

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

-------

**719)** ஒப்பந்ததாரர் திரு. BEML LTD, Chennai அவர்கள் செலுத்திய வைப்புத் தொகை ரூ.99,000/-யை பணி கிடைக்கப் பெறாத காரணத்தினால் தொகையை திரும்ப வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளா.

மேற்படி ஒப்பந்ததாரர் செலுத்திய வைப்புத் தொகை 3 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதால் காலங்கடந்த வைப்புத் தொகை கணக்கிற்கு கொண்டு செல்லப்பட்டுவிட்டது. எனவே வைப்புத் தொகையை திரும்ப வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அனுமதி வழங்கலாம். ( பி.5 / 4273 / 2019)

-----

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.**

-------

**720)** திருப்பூர் மிடுக்கான நகரம் திட்டத்தின் கீழ் திருப்பூர் மாநகராட்சி பகுதியில் உள்ள நொய்யல் ஆற்றின் 6.72 கி.மீ.நீளத்திற்கு மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள ஆறாவது High Power Project Sanctioning Committee மூலமாக 156.76 கோடிக்கு 12-10-2018ம் தேதியில் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. மேற்கண்ட பணியின் மதிப்பீட்டை நிர்வாக நலன் கருதி ஆறு சிப்பங்களாக பிரித்து பணி மேற்கொள்ள திருப்பூர் மாநகராட்சி மாமன்ற தீர்மான எண். 426 நாள் 24-01-2019-ன்படி தீர்மானம் ஒப்புதல் பெறப்பட்டது. மேற்கண்ட ஆறு சிப்பங்களில் சிப்பம் எண்.1 திருப்பூர் மாநகராட்சி பகுதிகளில் வெளியேறும் கழிவு நீரை சேகரம் செய்ய நொய்யல் ஆற்றின் வடக்குப்புற கரையோரம் வடிகால் கட்டுதல் பணிக்கு தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண். 25477/2018 0DO1. நாள் 04-02-2019 வாயிலாக ரூ.30.50 கோடி மதிப்பீட்டிற்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டதையடுத்து, மேற்படி பணிக்கு 24-06-2019 அன்று இரட்டை உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன.

**720-ன் தொடர்ச்சி**

அதன்படி திருப்பூர் மாநகராட்சி பகுதிகளில் வெளியேறும் கழிவுநீரை சேகரம் செய்ய நொய்யல் ஆற்றின் வடக்குப்புற கரையோரம் வடிகால் கட்டுதல் பணிக்கு ( மதிப்பீட்டுத் தொகை ரூ.30,50,00,000/-) 24-06-2019 அன்று திரு.A.D.இளங்கோ, குன்னத்தூர் மற்றும் திரு.A. வெங்கடாசலம், சூலூர் ஆகிய இரண்டு ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியிருந்தனர்.

மேற்கண்ட ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதிகளுக்கான உறை 24-06-2019 அன்று திறப்பு செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக்குழுவால், மேற்படி ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதிகள் பரிசீலனை செய்யப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை அளித்திருந்த இரண்டு ஒப்பந்ததாரர்களுமே இப்பணியை செய்ய தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் இல்லையென ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக்குழுவால் முடிவெடுக்கப்பட்டது. எனவே மேற்படி ஒப்பந்தப்புள்ளியை இரத்து செய்து விட்டு 2019-20 செந்தூர வீதப் பட்டியலின்படி திருத்திய மதிப்பீட்டினை ரூ.33.55 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டினை தலைமைப் பொறியாளர், நகராட்சிகளின் நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதி பெற்று மறு ஒப்பந்தப்புள்ளி கோர மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. கூடுதல் நிதித் தொகையினை சீர்மிகு நகராட்சிகள் தொகையிலேயே மேற்கொள்ளலாம்.

**அலுவலகக் குறிப்பு** : அனுமதி வழங்கலாம். ( TSCL/E1 / 6630 (II) / 2017 )

-------

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.

-------

**721)** திருப்பூர் மாநகராட்சியின் மக்கள் தொகை 2011ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 8,77,778 ஆகும். 2020, 2035 மற்றும் 2050 ஆம் ஆண்டுகளில் எதிர்பார்க்கப்படும் மக்கள் தொகை முறையே 10.80 இலட்சம், 14.80 இலட்சம் மற்றும் 19.50 இலட்சங்களாகும். திருப்பூர் மாநகராட்சியுடன் 2011ம் ஆண்டு 2 நகராட்சிகள் மற்றும் 8 பேரூராட்சிகள் இணைக்கப்பட்டு மாநகராட்சி எல்லை 27.27 ச.கி.மீட்டரிலிருந்து 159 ச.கி.மீட்டராக உயர்ந்துள்ளது. திருப்பூர் மாநகரம் பின்னலாடை தொழில் காரணமாக வேகமாக வளர்ந்து வரும் நகரமாக உள்ளதால் மாநகர மக்களின் அடிப்படை அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு அத்தியாவசிய பணிகளான சாலைகள் அமைத்தல், மழைநீர் வடிகால் அமைத்தல், தெருவிளக்குகள் அமைத்தல், பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் விநியோகம் உள்ளிட்ட பணிகள் பல்வேறு திட்டப் பணிகளுக்கு மூலமாகவும், மாநகராட்சி பங்கு தொகை மூலமாகவும், இத்திட்டப் பணிகளுக்கு அரசு வழங்கும் மான்யங்கள் மூலமாகவும், மாநகராட்சி பங்கு தொகை மூலமாகவும், பங்குத் தொகை செலுத்த இயலாத திட்டங்களுக்கு உலகவங்கி மற்றும் இதர கடன் நிதி வழங்கும் நிறுவனங்கள் மூலமாக கடன் பெற்றும் திட்டங்கள் நிறைவேற்றப்படுகிறது.

திருப்பூர் மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் 2007ம் ஆண்டு வடிவமைக்கப்பட்டு 22 வார்டுகளில் பகுதியாக செயல்பாட்டில் உள்ளது. மாநகர இதர பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டம் விரிவாக்கம் செய்ய 2017-20ம் ஆண்டு அம்ரூத் மற்றும் ஆசிய வங்கி நிதி ஆதாரத்தின் கீழ் ரூ.604.05 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு ஆசிய வங்கி நிதி ஆதாரத்துடன் பணியாணை வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. பாதாள சாக்கடை நடைபெறும் இடங்களுக்கு அவ்வப்போது சாலை சீரமைப்பு பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**721-ன் தொடர்ச்சி**

2015-16ம் ஆண்டு அம்ரூத் திட்டத்தின் கீழ் ரூ.250.00 கோடி மதிப்பீட்டில் முதற்கட்டமாக குடிநீர் பகிர்மானக் குழாய்கள் பதிக்கும் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் நடைபெற்று வருகிறது. 2ம் கட்டமாக 2017-20ம் ஆண்டு அம்ரூத் மற்றும் ஆசிய வங்கி நிதி ஆதாரத்தின் கீழ் திட்டத்தின் கீழ் ரூ.1063.51 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றுவதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இதற்கு அம்ரூத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் நிதியை தவிர மீதமுள்ள செலவினம் ஆசியன் வளர்ச்சி வங்கி (எ.டி.பி) கடனாக வழங்குகிறது.

2016-17 முதல் 2018-2019 வரை வருடம் வாரியாக மேற்கொள்ளப்பட்ட பணிகள் பற்றிய விபரம் பின்வருமாறு.

| வ.எண். | நிதியாண்டு | மேற்கொள்ளப்பட்ட மொத்த பணிகள் | மொத்த தொகை ரூபாய்(கோடியில்) |
|---|---|---|---|
| 1. | 2016-2017 | 412 | 28.758 |
| 2. | 2017-2018 | 372 | 39.673 |
| 3. | 2018-2019 | 448 | 78.669 |
| | **மொத்தம்** | **1232** | **147.100** |

மேலும் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதிகளுக்கும் தேவைக்கேற்ப விரிவான அபிவிருத்திப் பணிகள் நடைபெற்று வருகிறது. பொது நிதியிலிருந்தும் நிதி ஆதாரத்திற்கு ஏற்ப பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும் குடிநீர் விநியோக பணிகள், சாலைப் பணிகள் மற்றும் அடிப்படை வசதி திட்டத்திற்காக பெற்ற கடன் தொகை, திருப்பி செலுத்திய கடன் தொகை மற்றும் செலுத்த வேண்டிய கடன் தொகை அதற்கான வட்டித் தொகை ஆகிய விபரங்கள் பின்வருமாறு.

**LOAN DETAILS**

| SL. NO | BORROWED FROM | PROJECT NAME | LOANED AMOUNT | YEAR OF BORROWING | CLOSING YEAR | RATE OF INTEREST | AMOUNT PAID SO FOR 31-03-2019 | INTEREST PAID SO FOR 31-03-2019 | LOAN BALANCE 01-04-2019 | INTEREST TO BE PAID |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| 1. | TUFIDCO | TUF-349 ROAD WORKS | 454882000 | 01-06-2016 | 30-09-2015 | 10.6 | 130572240 | 107965343 | 324309760 | 110593328 |
| 2. | TNUDF | 1529- SWD | 40000000 | 12-02-2010 | 01-03-2022 | 8.34 | 23299108 | 23616909 | 16700892 | 4210312 |
| 3. | TNUDF | 1551- SWD | 50000000 | 28-06-2010 | 01-07-2022 | 8.34 | 26115439 | 30600995 | 23884561 | 4146477 |
| 4. | TNUDF | 1560- SWD | 90000000 | 10-08-2010 | 01-09-2022 | 8.34 | 47007790 | 55250417 | 42992210 | 7463657 |
| 5. | TNUDF | 1572- SWD | 90000000 | 29-10-2010 | 01-11-2022 | 8.34 | 18581936 | 23488953 | 21418064 | 4210312 |
| 6. | TNUDF | 1597- SWD | 29000000 | 23-03-2011 | 01-04-2023 | 8.34 | 11863911 | 16228212 | 17136089 | 3893521 |
| 7. | TNUDF | 1633- SWD | 10700000 | 16-03-2012 | 01-04-2024 | 8.34 | 3261085 | 2737558 | 7438915 | 1987524 |
| 8. | TNUDF | 1535-OFFICE BUILDING | 19900000 | 25-03-2010 | 01-04-2022 | 8.34 | 10393950 | 11213594 | 9506050 | 2584985 |
| 9. | TNUDF | 1603-OFFICE BUILDING | 16000000 | 04-07-2011 | 01-08-2023 | 8.34 | 6545607 | 9092729 | 9454393 | 2078378 |
| 10. | WSPF | 625004 | 183896390 | 30-08-2016 | 01-04-2026 | 6.25 | 17240286 | 19387917 | 166656104 | 39060026 |

**721ன் தொடர்ச்சி**

பின்வரும் பல்வேறு திட்டப் பணிகளுக்கு அரசு மான்யத்துடன் குறிப்பிட்ட சதவீதத்தில் மாநகராட்சி பங்குத் தொகையும் செலுத்தப்பட்டு வருகிறது.

கீழே குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு காலம் எண்.3-ல் குறிப்பிட்டுள்ளவாறு மாநகராட்சி பங்கு தொகை ரூ.1859.851 இலட்சம் செலுத்த வேண்டிய நிலையும், சில இனங்களில் கடன் பெற்றும் பங்குத் தொகை செலுத்த வேண்டிய நிலை உள்ளது.

| திட்டத்தின் பெயர் | அரசு மான்யம் | மாநகராட்சி பங்கு தொகை | மொத்த மதிப்பீடு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | ரூபாய் இலட்சத்தில் | | |
| ஐ.யூ.டி.எம்.2013-14 | 3994.00 | 765.35 | 4759.35 |
| அம்ரூத் 2015-16 | 151.20 | 64.80 | 216.00 |
| அம்ரூத் 2016-17 | 274.47 | 117.63 | 392.10 |
| அம்ரூத் 2017-20 | 338.311 | 144.991 | 483.302 |
| ஐ.ஜி.எப்.எப்.2015-16 | 56.00 | 15.00 | 71.00 |
| தூய்மை இந்தியா திட்டம் 2015-16 | 258.00 | 477.00 | 735.00 |
| தூய்மை இந்தியா திட்டம் 2018-19 | 1224.72 | 136.08 | 1360.00 |
| நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 2017-18 | 900.00 | 100.00 | 1000.00 |
| நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் 2018-19 | 2700.00 | 33.00 | 3033.00 |
| OMGFF 2013 - 14 | 200.00 | 6.00 | 260.00 |
| **மொத்தம்** | **10996.70** | **1859.851** | **12309.75** |

மத்திய அரசின் புதிய திட்டமான மிடுக்கான நகர திட்டத்தின் கீழ் ரூ.948.13 கோடி மதிப்பீட்டில் 24 பணிகள் தேர்வு செய்யப்பட்டு பெரும்பாலான பணிகளுக்கு பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. குடிநீர் திட்ட அபிவிருத்திப் பணிகள், நான்காவது குடிநீர் திட்டம், பாதாள சாக்கடை திட்டம் ஆகிய திட்டங்களுக்கு மாநகராட்சி பங்குத் தொகை வழங்க மாநகராட்சி நிதி நிலை இடம் கொடுக்க இயலாத நிலையில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் மாநகராட்சி பங்குத் தொகை ஏற்றுக் கொள்ளும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின் கீழ் எ.பி.டி. வங்கியால் வழங்கும் நிதியுதவி முற்றிலும் கடனாக திருப்பூர் மாநகராட்சிக்கு வழங்கப்பட உள்ளது.

| | திட்ட மதிப்பீட்டு தொகை | மத்திய அரசின் பங்கீடு (50 சதவீதம்) | மாநில அரசின் பங்கீடு 20 சதவீதம் | மாநகராட்சி பங்கீடு 30 சதவீதம் | எ.பி.டி. தொகை |
|---|---|---|---|---|---|
| புதிய குடிநீர் திட்டம் | 250.00 | 125.00 | 50.00 | 75.00 | |
| நான்காவது குடிநீர் திட்டம் 2017-20 | 1063.51 | 496.47 | 198.59 | 106.35 | 262.10 |
| பாதாள சாக்கடை திட்டம் | 604.05 | 262.32 | 105.18 | 60.41 | 176.14 |

இந்நிலையில் பின்வரும் இனங்களுக்கு மாநகராட்சியால் செலுத்த வேண்டிய தொகைகள் தற்போது நிலுவையில் உள்ளன.

**721-ன் தொடர்ச்சி**

| வ.எண் | விபரம் | நிலுவை தொகை ரூபாய் கோடியில் |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டியது. | 37,48,89,365 |
| 2 | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த வேண்டியது | 10,38,76,098 |
| 3 | பணியாளர்களுக்கு ஊதியம் படிகள் ஓய்வூதியம் | 9,49,57,621 |
| 4 | நூலக வரி | 2,69,65,987 |
| 5 | கடன் தொகை ( TUFIDCO & TNUIFSL) | 4,59,44,192 |
| 6 | திட்டப் பணிகளுக்கு மாநகராட்சி பங்கு தொகை | 4,69,08,000 |
| 7 | முடிவடைந்த பணிகள் மீது ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்த வேண்டிய பட்டியல் தொகை | 22,38,22,433 |
| 8 | இதர இனங்கள் ( Recoveries) | 19,78,69,750 |
| | **மொத்தம்** | **98,52,33,446** |

மாநகராட்சியில் வருவாய் ஆதாரத்தை மேம்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகள்

1) ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படும் சொத்துவரி சீராய்வு 2018-19 லிருந்து 50% கூடுதலாக வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
2) விடுபட்ட சொத்துவரி இனங்களை அளவீடு செய்து வரி விதிப்பு செய்வதன் மூலமாக மேலும் வருவாய் கூடுதலாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.
3) விடுபட்ட தொழில்வரி இனங்கள் கண்டறிந்து தொழில்வரி விதிப்பு செய்வதன் மூலமாக கணிசமான வருவாய் கூடுதலாகும்.
4) குத்தகை இனங்களை ஆண்டு தோறும் 5 சதவீதம் உயர்வு செய்தும் மாத வாடகை இனங்களை மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை 15 சதவீதம் உயர்த்துவதன் மூலமாகவும் கணிசமான வருவாய் கூடுதலாக கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலே குறிப்பிட்டுள்ளவாறு வருவாய் இனங்களில் கணிசமாக கூடுதல் வருவாய் கிடைக்க வாய்ப்பு இருந்தாலும் ஆண்டுதோறும் உயர்வடையும் பணியாளர்களின் ஊதியம், ஓய்வூதியம் இதர படிகள் நிர்வாக செலவினங்கள் அதிகரித்து வருவதாலும், அரசிடம் பெற்ற கடன் மற்றும் கடனுக்கான வட்டி தொகை திருப்பி செலுத்துதல், திட்டங்களுக்கு பெறப்பட்ட மான்யத் தொகையுடன் மாநகராட்சி பங்குத் தொகையும் அதிகரித்து வருவதால் மாநகராட்சியில் மிகுந்த நிதி சுமை ஏற்பட்டுள்ளது.

தற்போது உள்ள பொறுப்புகளை தீர்வு செய்தால் மட்டுமே எ,.டி.பி. வங்கி வழங்கும் கடனுக்கான அசல் மற்றும் வட்டித் தொகைகள் நிலுவையின்றி உரிய காலத்தில் திருப்பி செலுத்த இயலும்.

ஆகவே திருப்பூர் மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு கட்டமைப்பு மற்றும் திட்டப்பணிகள் மூலதன பணிகள், பொது நிதி பணிகள் மற்றும் அத்தியாவசிய செலவினங்களுக்கான பட்டியல் தொகை வழங்க ஏதுவாக மாநகராட்சிக்கு மிகவும் அவசியமாக தேவைப்படும் ரூ.150.00 கோடியினை ஒரு முறை மட்டுமே வழங்கப்படும் மான்யமாக ( One time grant) வழங்க பரிந்துரை செய்ய அரசுக்கு கருத்துரு அனுப்ப மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**( ந.க.எண். இ.1 / 5776 / 2019)**

--------

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.

-------

**722)** திருப்பூர் மாநகராட்சியானது 01-01-2008 முதல் தரம் உயர்த்தப்பட்டு பின்னர் நல்லூர் மற்றும் 15 வேலம்பாளையம் ஆகிய இரண்டு மூன்றாம் நிலை நகராட்சிகள் மற்றும் ஆண்டிபாளையம், செட்டிபாளையம், மண்ணரை, முருகம்பாளையம், முத்தனம்பாளையம், நெருப்பெரிச்சல், தொட்டிபாளையம் மற்றும் வீரபாண்டி ஆகிய 8 கிராம பஞ்சாயத்துக்களை இணைத்து விரிவாக்கம் செய்யப்பட்டு திருப்பூர் மாநகராட்சியாக 25-10-2011-ல் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. திருப்பூர் மாநகராட்சியின் மொத்த பரப்பளவு 159.35 ச.கி.மீட்டராகும். 2011ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 8,77,778 ஆகும். 2010ம் ஆண்டு உத்தேச மக்கள் தொகை 10,20,000 ஆகும். மாநகராட்சியில் உள்ள மொத்த மழைநீர் வடிகால் நீளம் 1429.232 கி.மீ. ஆகும். இதில் கச்சா மழைநீர் வடிகால் 1409.39 கி.மீ.ரும், மூடுவடிகால் நீளம் 19.352 கி.மீ. ஆகும்.

இம்மாநகராட்சியில் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள வடிகால்கள் பள்ளமாக உள்ளதாலும், கச்சா வடிகாலின் கொள்ளளவு குறைவாக உள்ளதாகவும், மழை காலங்களில் மழைநீர் மற்றும் கழிவுநீர் செல்வதில் தேக்கம் ஏற்பட்டு, சாலைகளில் கழிவுநீர் தேக்கமடைந்து வழிந்தோடும் நிலையில் உள்ளதால் சுகாதாரமற்ற நிலை ஏற்படுகிறது. ஆகவே மாநகராட்சி பகுதியில் உள்ள பல்வேறு இடங்களில் புதை மழைநீர் வடிகால் கட்டவும், சாலைகள் ஏற்படுத்தவும் மற்றும் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள பின்வருமாறு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வார்டு எண். | பணியின் பெயர் | பணி செய்ய வேண்டியதின் அவசியம் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சம் |
|---|---|---|---|---|
| 1 | 3 | குமரன் காலனி முதல் பிரியங்கா நகர் வரை புதை மழைநீர் வடிகால் அமைத்தல் | குமரன் காலனி முதல் பிரியங்கா நகர் வரை மழைக்காலங்களில் மழைநீர் உடன் கழிவுநீரும் சேர்ந்து சாலை ஓரங்களில் தேக்கம் அடைந்து சுகாதாரக் கேடு ஏற்படுவதால் அப்பகுதியில் புதை மழைநீர் வடிகால் அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. | 72.00 |
| 2 | 3 | வெங்கடேஸ்வரா நகர் முதல் அன்னையம் பாளையம் வரை மழைநீர் வடிகால் சீரமைக்கவும் மற்றும் புதி மழைநீர் வடிகால் கட்டி சிறுபாலம் அமைக்க | வெங்கடேஸ்வரா நகர் முதல் அன்னையம் பாளையம் வரை மழைநீர் வடிகால் சேதமடைந்து உள்ளதால் மழைக்காலங்களில் கழிவுநீருடன் கலந்து சுகாதாரக் கேடு ஏற்படுகிறது. இதனால் அதனை சீரமைக்கவும் புதிய மழைநீர் வடிகால் கட்டி சிறுபாலம் அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. | 65.00 |
| 3 | 5 | வேலம்பாளையம் ரிங் ரோடு பகுதியில் ( மணீஸ் தியேட்டர் முதல் கோவை டிபார்ட்மெண்டல் ஸ்டோர் வரை) ஆர்.சி.சி. மழைநீர் வடிகால் அமைத்தல் | மழைக்காலங்களில் மழைநீர் மேற்கண்ட பகுதியில் தேங்கி மக்கள் பயன்படுத்த இயலாத நிலை உள்ளது மற்றும் போக்குவரத்து நிறைந்த பகுதியாக உள்ளதாலும் மேற்கண்ட பகுதியில் ஆர்.சி.சி. மழைநீர் வடிகால் அமைக்க மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. | 75.00 |
| 4 | 7 | மரகதம்மாள் மருத்துவமனை முதல் அங்கேரி பாளையம் பிரதான சாலை வரை மழைநீர் வடிகால் சீரமைக்கவும் மற்றும் புதியமழைநீர் வடிகால் கட்டி சிறுபாலம் அமைக்க | மரகதம்மாள் மருத்துவமனை முதல் அங்கேரிபாளையம் பிரதான சாலை வரை மழைநீர் வடிகால் சேதமடைந்து உள்ளதால் மழைக்காலங்களில் கழிவுநீருடன் கலந்து சுகாதாரக்கேடு ஏற்படுகிறது. இதனால் அதனை சீரமைக்கவும், புதிய மழைநீர் வடிகால் சிறுபாலம் அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. | 163.00 |

| வ. எண் | வார்டு எண். | பணியின் பெயர் | பணி செய்ய வேண்டியதின் அவசியம் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சம் |
|---|---|---|---|---|
| 5 | 10 | பாரதிதாசன் நகர் முதல் நாராயணசாமி நகர் வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் | பாரதிதாரசன் நகர் முதல் நாராயணசாமி நகர் பகுதியில் மழைக்காலங்களில் மழைநீர் உடன் கழிவு நீர்களும் சேர்ந்து சாலை ஓரங்களில் தேக்கம் அடைந்து சுகாதாரக்கேடு ஏற்படுவதால் அப்பகுதியில் மழைநீர் வடிகால் கட்டி சிறுபாலம் அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. | 39.00 |
| 6 | 11 | செல்லம்மாள்காலனி பள்ளி வீதி மற்றும் குறுக்கு வீதிகளில் (சாமுண்டிபுரம் மெயின்ரோடு முதல் தியாகி பழனிச்சாமி நகர் சுடுகாடு வரை ) மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் | செல்லம்மாள் காலனி பள்ளி வீதி மற்றும் குறுக்கு வீதிகளில் (சாமுண்டிபுரம் மெயின்ரோடு முதல் தியாகி பழனிச்சாமி நகர் சுடுகாடு வரை ) பகுதியில் மழைக்காலங்களில் மழைநீர் உடன் கழிவுநீர்களும் சேர்ந்து சாலை ஓரங்களில் தேக்கம் அடைந்து சுகாதாரக் கேடு ஏற்படுவதால், அப்பகுதியில் மழைநீர் வடிகால் கட்டி சிறுபாலம் அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. | 93.00 |
| 7 | 11 | ரஜினி கல்யாண மண்டப வீதியில் ( சாமுண்டிபிரம் பிரதான சாலை முதல் நாகாத்தம்மன் கோவில் வரை ) மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | மழைக்காலங்களில் மழைநீர் உடன் கழிவுநீர்களும் சேர்ந்து சாலை ஓரங்களில் தேக்கம் அடைந்து சுகாதாரக் கேடு ஏற்படுவதால், அப்பகுதியில் மழைநீர் வடிகால் கட்டி சிறுபாலம் அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. | 30.00 |
| 8 | 12 | மகாசக்தி நகர் பகுதியில் சேதமடைந்த மழைநீர் வடிகால் சீரமைக்கவும்மற்றும் புதிய மழைநீர் வடிகால் கட்டி சிறுபாலம் அமைக்க | மகாசக்தி நகர் பகுதியில் மழைநீர் வடிகால் சேதமடைந்துள்ளதால் மழைக்காலங்களில் கழிவுநீருடன் கலந்து சுகாதாரக் கேடு ஏற்படுகிறது. இதனால் அதனை சீரமைக்கவும், புதிய மழைநீர் வடிகால் கட்டி சிறுபாலம் அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. | 16.90 |
| 9 | 12 | சாமுண்டிபுரம் பிரதான சாலையில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | மழைக்காலங்களில் மழைநீர் மேற்கண்ட பகுதியில் தேங்கி மக்கள் பயன்படுத்த இயலாத நிலை உள்ளது. மற்றும் போக்குவரத்து நிறைந்த பகுதியாக உள்ளதாலும் மேற்கண்ட பகுதியில் மழைநீர் வடிகால் அமைக்க மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. | 32.00 |
| 10 | 14 | சாமுண்டிபுரம் ரிங் ரோடு (சிவசக்தி நகர் முதல்சிறுபூலுவப்பட்டி ரிங் ரோடு) மற்றும் சிறுபூலுவப்பட்டி ரிங் ரோடு (எ.டி.காலனி முதல்காவல்நிலையம் வரை ) மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் | சாமுண்டிபுரம் ரிங் ரோடு (சிவசக்தி நகர் முதல்சிறுபூலுவப்பட்டி ரிங் ரோடு) மற்றும் சிறுபூலுவப்பட்டி ரிங் ரோடு பகுதியில் மழைக்காலங்களில் மழைநீர் உன் கழிவுநீரும் சேர்ந்து சாலை ஓரங்களில் தேக்கம் அடைந்து சுகாதாரக் கேடு ஏற்படுவதால் அப்பகுதியில் மழைநீர் வடிகால் கட்டி சிறுபாலம் அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. | 95.00 |

| வ. எண் | வார்டு எண். | பணியின் பெயர் | பணி செய்ய வேண்டியதின் அவசியம் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சம் |
|---|---|---|---|---|
| 11 | 14 | சாமுண்டிபுரம் மெயின்ரோடு (சிவசக்தி நகர் முதல் சிறுபூலுவப்பட்டி ரிங் ரோடு (எஸ்.பி. நகர் பேருந்து நிறுத்தம் முதல் ஜே.ஜே.நகர் ) வரை மழைநீர் வடிகால்சீரமைக்கவும், மற்றும் புதிய மழைநீர் வடிகால் கட்டி சிறுபாலம் அமைத்தல் | சாமுண்டிபுரம் மெயின்ரோடு (சிவசக்தி நகர் முதல் சிறுபூலுவப்பட்டி ரிங் ரோடு (எஸ்.பி. நகர் பேருந்து நிறுத்தம் முதல் ஜே.ஜே.நகர் ) வரை மழைநீர் வடிகால் சேதமடைந்துள்ளதால் மழைக்காலங்களில் கழிவுநீருடன் கலந்து சுகாதாரக் கேடு ஏற்படுகிறது. இதனால் அதனை சீரமைக்கவும் புதிய மழைநீர் வடிகால் கட்டி சிறுபாலம் அமைக்க மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. | 99.00 |
| 12 | 18 | தோட்டத்துப்பாளையம் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் | மழைக்காலங்களில் மழைநீர் கழிவு நீருடன் அதிகளவு கலந்து சாலை ஓரங்களில் தேங்குகிறது. இதனால் டெங்கு காய்ச்சல் மற்றும் தொற்றுநோய் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால் இப்பகுதியில் மழைநீர் வடிகால் கட்டி சிறுபாலம் அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. | 79.00 |
| 13 | 19 | பூலுவப்பட்டி குட்டை முதல் ESS TEE கம்பெனி வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் | பூலுவப்பட்டி பகுதியில் நீர்த்தேக்க குட்டை அமைந்துள்ளது. மழைக்காலங்களில் குட்டைக்கு நீர்வரத்து அதிகமாகஉள்ளதால் குட்டையிலிருந்து நீர் வெளியேறி அருகில் உள்ள கருப்பராயன் நகர் குடியிருப்பு பகுதிகளில் நீர் புகுந்து விடுகிறது. மேலும் சாலைகளில் நீர் தேங்கி சுகாதாரக்கேடு ஏற்படுவதால் பூலுவப்பட்டி குட்டை முதல் ESS TEE கம்பெனி வரை மழைநீர் வடிகால் கட்டி சிறுபாலம் அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. | 44.50 |
| 14 | 19 | மலர்பிரியா மருத்துவமனை முதல் பொன்னம்மாள் நகர் வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் | பாண்டியன் நகர் மற்றும் அண்ணா நகர் பகுதியில் சேகரமாகும் மழைநீர் மலர்பிரியா மருத்துவமனை சாலை வழியாக சென்று சாலை ஓரங்களில் தேங்குவதால் சுகாதாரக் கேடு ஏற்பட்டு நோய்கள் பரவுகிறது. இதனால் மலர்பிரியா மருத்துவமனை முதல் பொன்னம்மாள் நகர் வரை மழைநீர் வடிகால் கட்டி சிறுபாலம் அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. | 88.50 |
| 15 | 19 | பொன்னம்மாள் நகர் முதல் திருநகர் வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் | பொன்னம்மாள் நகர் முதல் திருநகர் வரை உள்ள நீர்த்தேக்க குட்டைகளில் மழைக்காலங்களில் குட்டைக்கு நீர்வரத்து அதிகமாக உள்ளதால் குட்டையிலிருந்து நீர் வெளியேறி அருகில் உள்ள குடியிருப்பு பகுதிகளில் புகுந்த விடுகிறது. மேலும் சாலைகளில் நீர் தேங்கி சுகாதாரக் கேடு ஏற்படுவதால் பொன்னம்மாள் நகர் முதல் திருநகர் வரை மழைநீர் வடிகால் கட்டி சிறுபாலம் அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. | 88.50 |

| வ. எண் | வார்டு எண். | பணியின் பெயர் | பணி செய்ய வேண்டியதின் அவசியம் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சம் |
|---|---|---|---|---|
| 16 | 19,30 | மும்மூர்த்தி நகர் மேற்கு பிரதான சாலை ( பி.என்.ரோடு முதல் கங்கா நகர் வரை) மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் | மும்மூர்த்தி நகர் மேற்கு பிரதான சாலையில் மழைநீர் வடிகால் இல்லாத காரணத்தினால் மழைநீர் சாலைஓரங்களில் தேக்கமடைந்துசுகாதாரகேடுஏற்படுகிறது. மேலும் சாலை சேதமடைந்து சுகாதார கேடு ஏற்படுகிறது. மேலும் சாலை சேதமடைந்து உள்ளதால் புது தார்தளம் அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. | 79.60 |
| 17 | 20 | அவினாசி நகர் முதல் நல்லாறு வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் | மழைக்காலங்களில் மழைநீர் உடன் கழிவு நீரும் சேர்ந்து சாலை ஓரங்களில் தேக்கம் அடைந்து சுகாதாரக் கேடு ஏற்படுவதால் அவினாசி நகர் முதல் நல்லாறு வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுவதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உள்ளது. | 73.80 |
| 18 | 22 | குறிஞ்சி நகர் முதல் கவுண்டநாயக்கன் பாளையம் வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் | மழைக்காலங்களில் மழைநீர் உடன் கழிவு நீர்களும் சேர்ந்து சாலை ஓரங்களில் தேக்கம் அடைந்து சுகாதாரக் கேடு ஏற்படுவதால் குறிஞ்சி நகர் முதல்கவுண்ட நாயக்கன்பாளையம் வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுவதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உள்ளது. | 71.50 |
| 19 | 28 | சின்னபொம்ம நாயக்கன்பாளையம் வடக்கு பிரதான சாலைமுதல் (கேத்தம் பாளையம் ஜங்சன் ரோடு) நல்லாறு வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் | மழைக்காலங்களில் மழைநீர் உடன் கழிவு நீர்களும் சேர்ந்து சாலை ஓரங்களில் தேக்கம் அடைந்து சுகாதாரக் கேடு ஏற்படுவதால் சக்தி தியேட்டரில் இருந்து பவித்ரா தெரு வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுவதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது. | 83.00 |
| 20 | 29 | சக்தி தியேட்டரில் இருந்து பவித்ரா தெரு வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் | மழைக்காலங்களில் மழைநீர் உடன் கழிவுநீரும் சேர்ந்து சாலை ஓரங்களில் தேக்கம் அடைந்து சுகாதாரக் கேடு ஏற்படுவதால் சக்தி தியேட்டரில் இருந்து பவித்ரா தெரு வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுவதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. | 94.00 |
| 21 | 29 | பி.என். சாலை (ராமருஷ்ணா டிம்பர்ஸ் முதல் நல்லாறு வரை) பிச்சம்பாளையம் பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்தல் | மேற்கண்ட பகுதியில் மக்கள் நடமாட முடியாத அளவிற்கு மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கி நிற்பதாலும், வாகன போக்குவரத்து நடைபெறாமல் நெரிசல் ஏற்படுவதாலும், மக்கள் புகார் தெரிவித்து உள்ளதாலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவுரையின் படியும், இப்பகுதிக்கு மழைநீர்வடிகால் கட்டமதிப்பீடு தயார் செய்து இணைக்கப்பட்டுள்ளது. | 80.00 |
| 22 | 29 | பவித்ரா தெரு முதல் ராமகிருஷ்ணா / டிம்பர்ஸ் வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் | மழைக்காலங்களில் மழைநீர் உடன் கழிவு நீரும் சேர்ந்து சாலை ஓரங்களில் தேக்கம் அடைந்து சுகாதாரக் கேடு ஏற்படுவதால் பவித்ரா தெரு முதல் ராமகிருஷ்ணா / டிம்பர்ஸ் வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுவதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. | 67.00 |

| வ. எண் | வார்டு எண். | பணியின் பெயர் | பணி செய்ய வேண்டியதின் அவசியம் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சம் |
|---|---|---|---|---|
| 23 | 30 | ராஜா நகர் பிரதான சாலையில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | மழைக்காலங்களில் மழைநீர் உடன் கழிவு நீரும் சேர்ந்து சாலை ஓரங்களில் தேக்கம் அடைந்து சுகாதாரக் கேடு ஏற்படுவதால் ராஜா நகர் பிரதான சாலையில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுவதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. | 50.00 |
| 24 | 31 | வி.கே.ஆர். தோட்டம் பிரதான சாலை கொங்கு விநாயகர் கோவில் முதல் வளர்சாலை வரை மழைநீர் வடிகால் சீரமைக்கவும் மற்றும் புதிய மழைநீர் வடிகால் கட்டி சிறுபாலம் அமைக்க | வி.கே.ஆர். தோட்டம் பிரதான சாலை கொங்கு விநாயகர் கோவில் முதல் வளர்சாலை வரை உள்ள பகுதியில் ஏற்கனவே உள்ள வடிகால் இடிந்து விழுந்துள்ள படியாலும், போக்குவரத்து நிறைந்த பகுதியாக உள்ளதாலும், மேற்கண்ட பகுதி நொய்யல் ஆற்றில் இணைக்கும் பகுதியாகவும் தற்போது உள்ளது. எனவே மேற்கண்ட பழுதடைந்துள்ள வடிகாலை கொண்டு அளவை அகலப்படுத்தி புதிதாக வடிகால் கட்டவும், சாலையை மேம்படுத்தவும் ( வி.கே.ஆர்.தோட்டம் பிரதான சாலையில் கொங்கு விநாயகர் கோவில் முதல் வளம் சாலை வரை மேற்குபுறம் வடிகால் ) மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. | 97.00 |
| 25 | 32,33 | மணியகாரம்பாளையம் பிரதான சாலை(காஞ்சி நகர் சாலை சந்திப்பு முதல் இ.பி. அலுவலகம் வரை ) மற்றும் மூகாம்பிகை நகர் பிரதான சாலையில் (ரயில்வே பாலம் முதல் 5வது விரிவு வரை) ஆர்.சி.சி. மழைநீர் வடிகால் கட்டுதல் | மணியகாரம்பாளையம் பிரதான சாலை(காஞ்சி நகர் சாலை சந்திப்பு முதல் இ.பி. அலுவலகம் வரை ) மற்றும் மூகாம்பிகை நகர் பிரதான சாலையில் (ரயில்வே பாலம் முதல் 5-வது விரிவு வரை) மழைநீர் வடிகால் சேதமடைந்து உள்ளதால் மழைக்காலங்களில் கழிவுநீருடன் கலந்து சுகாதாரக் கேடு ஏற்படுகிறது. இதனால் அதனை சீரமைக்கவும் புதிய மழைநீர் வடிகால் கட்டி சிறுபாலம் அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. | 99.00 |
| 26 | 37 | ஜீவா நகர் முதல் செவந்தாம்பாளையம் சந்திப்புவரை மற்றும் சி.டி.சி.காலனி முதல் தாராபுரம் ரோடு சந்திப்பு வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | மழைக்காலங்களில் மழைநீர் உடன் கழிவு நீர்களும் சேர்ந்து சாலை ஓரங்களில் தேக்கம் அடைந்து சுகாதாரக் கேடு ஏற்படுவதால் ஜீவா நகர் முதல் செவந்தாம்பாளையம் சந்திப்பு வரை உள்ள சாலையில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுவதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. | 99.00 |
| 27 | 38 | அத்திமரத்துபுதூர் பிரதான சாலையில் மூன்று ரோடு சந்திப்பு முதல் காசிபாளையம் பிரதான சாலைவரை ஆர்.சி.சி. மழைநீர் வடிகால் அமைத்தல். | மழைக் காலங்களில் கழிவுநீருடன் மழைநீர் கலந்து சுகாதாரக் கேடு ஏற்படுகிறது. இதனால் அதனை சீரமைக்கவும், புதிய மழைநீர் வடிகால் கட்டி சிறுபாலம் அமைக்க மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. | 98.70 |

| வ. எண் | வார்டு எண். | பணியின் பெயர் | பணி செய்ய வேண்டியதின் அவசியம் | மதிப்பீட்டு தொகை ரூ.இலட்சம் |
|---|---|---|---|---|
| 28 | 55 | எல்.ஆர்.ஜி. வளாகம் மற்றும் மாவட்ட ஆட்சியரகம் அமைந்துள்ள பெருந்திட்ட வளாகப் பகுதியின் தென்புறம் ஜம்மனை ஓடை வரை புதை மழைநீர் வடிகால் கட்டுதல் | எல்.ஆர்.ஜி. வளாகம் மற்றும் மாவட்ட ஆட்சியரகம் அமைந்துள்ள பெருந்திட்ட வளாக பகுதியில் தென்புறம் உள்ள கச்சா வடிகால் வழியாக மழைநீர் மற்றும் கழிவுநீர் ஜம்மனை ஓடையில் கலந்து மழைக்காலங்களில் வடிகால் கொள்ளளவு குறைவாக உள்ளதால், மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் தேங்கி சுகாதாரமற்ற நிலை ஏற்படுகிறது. இது தொடர்பாக மாவட்ட ஆட்சியரக அலுவலகத்தில் இருந்தும், காவல் துறை அலுவலர்களாலும், பல்வேறு கோரிக்கைகள் மற்றும் புகார்கள் எழுந்துள்ளதால் ஜம்மனை ஓடை வரை புதை மழைநீர் வடிகால் கட்ட மதிப்பீடு தயார் செய்து இணைக்கப்பட்டுள்ளது. | 99.00 |
| | | மொத்தம் | | 21.72 |

திருப்பூர் மாநகராட்சியின் பல்வேறு வார்டுகளில் மேலே குறிப்பிட்டுள்ளவாறு தயாரிக்கப்பட்டுள்ள 28 மதிப்பீடுகளுக்கும் ரூ.21.72 கோடியில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியமும், அத்தியாவசிய பணியாக உள்ளது. வடகிழக்கு பருவமழை துவங்கி உள்ள இக்காலத்தில் மழைநீர் தேங்குவதால் பொதுமக்களிடமிருந்து அதிகமான புகார்கள் வருவதுடன் போக்குவரத்து ஸ்தம்பித்து, பொது மக்களுக்கு மிகவும் இடையூறு ஏற்படுகிறது. இப்பணிகளை செய்வதற்கு மாநகராட்சியின் நிதி நிலைமை போதுமானதாக இல்லை என்பதால் இப்பணிகளை செய்ய உள்கட்டமைப்பு மற்றும் இடைவெளி நிரப்பும் நிதியின் கீழ் ரூ.21.72கோடி மான்யமாக வழங்குவதற்கு ஆவன செய்யக் கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்க மாமன்றம் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதி வழங்கலாம். ( இ.1 / 6089 / 2019)

------

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது.

----

**723)** திருப்பூர் மிடுக்கான நகரம் திட்டத்தின் கீழ் திருப்பூர் மாநகராட்சி பகுதியில் உள்ள நொய்யல் ஆற்றில் 6.72 கி.மீ. நீளத்திற்கு மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள Sixth High Power Project sanctioning Committee மூலமாக 156.76 கோடிக்கு 12-10-2018ம் தேதியில் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. மேற்கண்ட பணியின் மதிப்பீட்டை நிர்வாக நலன் கருதி ஆறு சிப்பங்களாக பிரித்து பணி மேற்கொள்ள திருப்பூர் மாநகராட்சி மாமன்ற தீர்மான எண்.426, நாள் 24-01-2019-ன்படி தீர்மானம் ஒப்புதல் பெறப்பட்டது. மேற்கண்ட ஆறு சிப்பங்களில் சிப்பம் எண்.2 திருப்பூர் மாநகராட்சி பகுதிகளில் வெளியேறும் கழிவுநீரை சேகரம் செய்ய நொய்யல் ஆற்றின் தெற்குப்புற கரையோரம் வடிகால் கட்டுதல் பணிக்கு தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண்.25477 / 2018 / டிஓ1 நாள் 04-02-2019 வாயிலாக ரூ.29.00 கோடி மதிப்பீட்டிற்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டதையடுத்து, மேற்படி பணிக்கு 02-04-2019 அன்று இரட்டை உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதில் நிர்வாக காரணமாக இப்பணிக்கு 02.05-2019ம் தேதி கால நீட்டிப்பு செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன.

**723-ன் தொடர்ச்சி**

அதன்படி திருப்பூர் மாநகராட்சி பகுதிகளில் வெளியேறும் கழிவுநீரை சேகரம் செய்ய நொய்யல் ஆற்றின் தெற்குப்புற கரையோரம் வடிகால் கட்டுதல் பணிக்கு ( மதிப்பீட்டுத் தொகை ரூ.29.00 கோடி) 02-05-2019 அன்று திருவாளர் சிவராம் அண்டு கோ, கோபிசெட்டிபாளையம் மற்றும் திருவாளர்.செல்லியம்மன் கன்ஸ்ட்ரக்சன்ஸ் (பி) லிமிடெட், பவானி ஆகிய இரண்டு ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியிருந்தனர்.

மேற்கண்ட ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதிகளுக்கான உறை 27-05-2019 அன்று திறப்பு செய்யப்பட்டு, திருப்பூர் மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக் குழுவால் பரிசீலனை செய்யப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் தொழில்நுட்ப நிலைக்குழு பரிசீலனைக்காக 04-10-2019ம் தேதிய கடிதத்துடன் அனுப்பி வைக்கப்பட்டது. இதில் நகராட்சி நிர்வாக ஆணையரக கடிதம் ந.க.எண்.25477/2018/DO1, நாள் 17-10-2019-ல் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்பட்டது எனவும் பத்திரிக்கையில் வெளியிடப்படவில்லை எனவும், விளக்கம் கேட்டு திருப்பப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தப்புள்ளிகளை பொறுத்த மட்டில் பாராளுமன்றத் தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுலில் இருந்த காரணத்தினால் அப்போது பத்திரிக்கையில் வெளியிடப்பட வாய்ப்பில்லை. மேலும் திருப்பூர் மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக் குழுவில் ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலிக்கப்பட்டுள்ளது. இக்குழுவிற்கு உரிய அதிகார ஒப்படைப்பு மாநகராட்சி ஆணையரின் செயல்முறை ஆணை ந.க.எண்.4395/2018/C1(Main), நாள் 24-08-2018-ல் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே இதில் விதி மீறல்கள் ஏதும் இல்லை என்பதாலும் தற்போது செந்தூர விலை பட்டியல் 2019-20ன்படி விலை விகிதம் மாறுதல் ஆகிவிட்டபடியால் மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை ரத்து செய்துவிட்டு, தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீடு ரூ.31.90 கோடிக்கு தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அலுவலகத்திற்கு திருத்திய தொழில்நுட்ப அனுமதி வேண்டி அனுப்பவும், திருத்திய மதிப்பீடு காரணமாக ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ.2.90 கோடியினை ஸ்மார்ட் சிட்டி நிதியிலிருந்தே மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :அனுமதி வழங்கலாம். ( இ.1 / 6630 - II (a) / 2017 )

-------

**தீர்மானம்** : **அனுமதி வழங்கப்பட்டது**.

----

**724)** திருப்பூர் மிடுக்கான நகரம் திட்டத்தின் கீழ் திருப்பூர் மாநகராட்சி பகுதியில் உள்ள நொய்யல் ஆற்றில் 6.72 கி.மீ. நீளத்திற்கு மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள Sixth High Power Project sanctioning Committee மூலமாக 156.76 கோடிக்கு 12-10-2018ம் தேதியில் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. மேற்கண்ட பணியின் மதிப்பீட்டை நிர்வாக நலன் கருதி ஆறு சிப்பங்களாக பிரித்து பணி மேற்கொள்ள திருப்பூர் மாநகராட்சி மாமன்ற தீர்மான எண்.426, நாள் 24-01-2019-ன்படி தீர்மானம் ஒப்புதல் பெறப்பட்டது. மேற்கண்ட ஆறு சிப்பங்களில் சிப்பம் எண்.3 திருப்பூர் மாநகராட்சி நொய்யல் ஆற்றின் கரையின் இருபுறமும் தார்சாலை அமைத்தல், பேவர் பிளாக் கற்கள் பதித்தல், கம்பி வேலி அமைத்தல் பணிக்கு தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண்.25477 / 2018 / டிஓ1 நாள் 04-02-2019 வாயிலாக ரூ.29.00 கோடி மதிப்பீட்டிற்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டதையடுத்து, மேற்படி பணிக்கு 02-04-2019 அன்று இரட்டை உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதில் நிர்வாக காரணமாக இப்பணிக்கு 02-05-2019ம் தேதி கால நீட்டிப்பு செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன.

அதன்படி திருப்பூர் மாநகராட்சி நொய்யல் ஆற்றின் கரையின் இருபுறமும் தார்சாலை அமைத்தல், பேவர் பிளக் கற்கள் பதித்தல், கம்பிவேலி அமைத்தல் பணிக்கு ( மதிப்பீட்டுத் தொகை ரூ.29,00,00,000/-) 02-05-2019 அன்று திரு.A.D. இளங்கோ, குன்னத்தூர் மற்றும் திரு.எ.வெங்கடாசலம், சூலூர் மற்றும் திருமதி.வி.மீனாள், தேவகோட்டை ஆகிய மூன் ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியிருந்தனர்.

**724-ன் தொடர்ச்சி**

மேற்கண்ட ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதிகளுக்கான உறை 27-05-2019 அன்று திறப்பு செய்யப்பட்டு, திருப்பூர் மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக் குழுவால் பரிசீலனை செய்யப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் தொழில்நுட்ப நிலைக்குழு பரிசீலனைக்காக 10-10-2019 ம் தேதிய கடிதத்துடன் அனுப்பி வைக்கப்பட்டது. இதில் நகராட்சி நிர்வாக ஆணையரக கடிதம் ந.க.எண்.25477 / 2018 / DO1, நாள் 25-10-2019-ல் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்பட்டது எனவும் பத்திரிக்கையில் வெளியிடப்படவில்லை எனவும், விளக்கம் கேட்டு திருப்பப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தப்புள்ளிகளை பொறுத்த மட்டில் பாராளுமன்றத் தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுலில் இருந்த காரணத்தினால் அப்போது பத்திரிக்கையில் வெளியிடப்பட்ட வாய்ப்பில்லை. மேலும் மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக்குழுவில் ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலிக்கப்பட்டுள்ளது. இக்குழுவிற்கு உரிய அதிகார ஒப்படைப்பு மாநகராட்சி ஆணையரின் செயல்முறை ஆணை ந.க.எண். 4395 / 201 8/C1 (Main), நாள் 24-08-2018-ல் வழங்கப்பட்டுள்ளது.ஆகவே இதில் வீதிமீறல்கள் ஏதும் இல்லை என்பதாலும் தற்போது செந்தூரவிலைப்பட்டியல் 2019-20ன்படி விலைவிகிதம் மாறுதல் ஆகிவிட்டபடியால் மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை ரத்து செய்துவிட்டு, தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீடு ரூ.30.25 கோடிக்கு தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அலுவலத்திற்கு திருத்திய தொழில்நுட்ப அனுமதி வேண்டி அனுப்பவும், திருத்திய மதிப்பீடு காரணமாக ஏற்படும் கூடுதல் செலவீனம் ரூ.1.25 கோடியினை ஸ்மார்ட் சிட்டி நிதியிலிருந்தே மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

அனுமதி வழங்கலாம். ( இ.1 / 6630 - II (b) / 2017 )

-------

**தீர்மானம்** : **அனுமதி வழங்கப்பட்டது**.

----

**725)** திருப்பூர் மிடுக்கான நகரம் திட்டத்தின் கீழ் திருப்பூர் மாநகராட்சி பகுதியில் உள்ள நொய்யல் ஆற்றில் 6.72 கி.மீ. நீளத்திற்கு மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள Sixth High Power Project sanctioning Committeeமூலமாக 156.76 கோடிக்கு 12-10-2018ம் தேதியில் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. மேற்கண்ட பணியின் மதிப்பீட்டை நிர்வாக நலன் கருதி ஆறு சிப்பங்களாக பிரித்து பணி மேற்கொள்ள திருப்பூர் மாநகராட்சி மாமன்ற தீர்மான எண்.426, நாள் 24-01-2019-ன்படி தீர்மானம் ஒப்புதல் பெறப்பட்டது. மேற்கண்ட ஆறு சிப்பங்களில் சிப்பம் எண்.4 திருப்பூர் மாநகராட்சி நொய்யல் ஆற்றின் கரையின் வடக்குப் பக்கம் தடுப்புச் சுவர் கட்டுதல், ஜம்மனை ஓடையின் குறுக்கே சிறுபாலங்கள் கட்டுதல் மற்றும் அனைக்காடு பகுதியில் பூங்காவுடன் கூடிய உணவகம் கட்டுதல் பணிக்கு தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண்.25477 / 2018 / டிஓ1 நாள் 09-02-2019 வாயிலாக ரூ.30.00 கோடி மதிப்பீட்டிற்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டதையடுத்து, மேற்படி பணிக்கு 02-04-2019 அன்று இரட்டை உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதில் நிர்வாக காரணமாக இப்பணிக்கு 02.05-2019 மற்றும் 31-05-2019ம் தேதிகளில் கால நீட்டிப்பு செய்யப்பட்டது. 24-06-2019அன்று இரண்டாவது அழைப்பிலும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்படாததால் மூன்றாவது அழைப்பில் 22-07-2019ம் தேதியில் இரட்டை உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன.

அதன்படி திருப்பூர் மாநகராட்சி நொய்யல் ஆற்றின் கரையின் வடக்கு பக்கம் தடுப்பு சுவர் கட்டுதல், ஜம்மனை ஓடையின் குறுக்கே சிறுபாலங்கள் கட்டுதல் மற்றும் அனைக்காடுபகுதியில் பூங்காவுடன் கூடிய உணவகம் கட்டுதல் பணிக்கு (மதிப்பீட்டுத் தொகை ரூ.30.00 கோடி) மூன்றாவது அழைப்பில் 22-07-2019 அன்று திருவாளர்.PSK இன்ஜினியரிங் கன்ஸ்ட்ரக்சன் அண்டு கோ, நாமக்கல் மற்றும் திருமதி.பி.லட்சுமி, நாமக்கல் ஆகிய இரண்டு ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியிருந்தனர்.

**725-ன் தொடர்ச்சி**

மேற்கண்ட ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதிகளுக்கான உறை 22-07-2019 அன்று திறப்பு செய்யப்பட்டு, திருப்பூர் மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி பரிசீலனைக் குழுவால் பரிசீலனை செய்யப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் தொழில்நுட்ப நிலைக்குழு பரிசீலனைக்காக 04-10-2019ம் தேதிய கடிதத்துடன் அனுப்பி வைக்கப்பட்டது. மேற்கண்ட பணிக்கு மூன்றாவது ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் 22 நாட்கள் கால இடைவெளியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டிருந்தது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விதிகளின்படி கோரப்படவில்லை என நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் தெரிவிக்கப்பட்டது. இத்திட்டப் பணிகள் சார்பாக நடைபெற்ற ஆய்வுக் கூட்டங்களின் போது நேரடியாக வழங்கப்பட்ட அறிவுரையின்படி கால தாமத்தை தவிர்க்க குறுகிய கால அறிவிப்பு வழங்குமாறு தெரிவித்துள்ளபடியால் குறுகியகால இடைவெளியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. தற்போது செந்தூர விலைப் பட்டியல் 2019-20ன்படி விலைவிகிதம் மாறுதல் ஆகிவிட்டபடியால் மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை ரத்து செய்துவிட்டு, தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீடு ரூ.31.50 கோடிக்கு தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அலுவலகத்திற்கு திருத்திய தொழில்நுட்ப அனுமதி வேண்டி அனுப்பவும், திருத்திய மதிப்பீடு காரணமாக ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ.1.50 கோடியினை ஸ்மார்ட் சிட்டி நிதியிலிருந்தே மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

அனுமதி வழங்கலாம். ( இ.1 / 6630 - II (c) / 2017 )

-------

**தீர்மானம்** : **அனுமதி வழங்கப்பட்டது**.

**----**

**726)** திருப்பூர் மிடுக்கான நகரம் திட்டத்தின் கீழ் திருப்பூர் மாநகராட்சி பகுதியில் உள்ள நொய்யல் ஆற்றில் 6.72 கி.மீ. நீளத்திற்கு மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ள Sixth High Power Project sanctioning Committeeமூலமாக 156.76 கோடிக்கு 12-10-2018ம் தேதியில் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. மேற்கண்ட பணியின் மதிப்பீட்டை நிர்வாக நலன் கருதி ஆறு சிப்பங்களாக பிரித்து பணி மேற்கொள்ள திருப்பூர் மாநகராட்சி மாமன்ற தீர்மான எண்.426, நாள் 24-01-2019-ன்படி தீர்மானம் ஒப்புதல் பெறப்பட்டது. மேற்கண்ட ஆறு சிப்பங்களில் சிப்பம் எண்.5 திருப்பூர் மாநகராட்சி நொய்யல் ஆற்றின் கரையின் தெற்குப் பக்கம் தடுப்புச் சுவர் கட்டுதல், மணியகாரம்பாளையம் பாலம் அருகில் பூங்காவுடன் கூடிய திறந்தவெளி அரங்கம் அமைக்கும் பணிக்கு தலைமைப் பொறியாளர்,சென்னை அவர்களின் செயல்முறைகள் ஆணை ந.க.எண்.25477/2018/டிஓ1 நாள் 09-02-2019 வாயிலாக ரூ.28.76 கோடி மதிப்பீட்டிற்கு தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டதையடுத்து, மேற்படி பணிக்கு 02-05-2019 அன்று இரட்டை உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன.

மேற்கண்ட தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை. பின்னர் 24-06-2019, 22-07-2019, 02-08-2019 மற்றும் 16-08-2019 ஆகிய தேதிகளில் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பிகளிலும், ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை. இந்நிலையில் 2019-2020ம் ஆண்டு செந்தூர விலைப்பட்டியல் மாறுதல் ஆகிவிட்டபடியால் இப்பணிக்காக தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீடு ரூ.31.53 கோடிக்கு தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அலுவலகத்திற்கு திருத்திய தொழில்நுட்ப அனுமதி வேண்டி அனுப்பவும், திருத்திய மதிப்பீடு காரணமாக ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ.2.77 கோடியினை ஸ்மார்ட் சிட்டி நிதியிலிருந்தே மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

அனுமதி வழங்கலாம். ( இ.1 / 6630 - II (d) / 2017 )

-------

**தீர்மானம்** : **அனுமதி வழங்கப்பட்டது**.

**----**

**727)** திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட நெருப்பெரிச்சல் கிராம பகுதியில் ( பாரதி நகர்) அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் 288 வாடகை குடியிருப்புகள் கட்டிடம் நடைபெற்று வருகிறது. மேற்படி கட்டிடத்திற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் ( 288 x 5 x 135 = 194400 Say = 213840 லிட்டர்) அளவில் பாதுகாக்கப்பட்ட குடிநீரினை வழங்கக் கோரி விண்ணப்பித்துள்ளார். நெருப்பெரிச்சல் பகுதியில் உள்ள நிலமட்டத் தொட்டியில் இருந்து பாரதி நகர் பகுதியில் கட்டப்பட்டு வரும் வாடகை குடியிருப்பு வளாகம் வரை குடிநீர் விநியோகக் குழாய் பதித்து அளவுமானி மற்றும் திருகு அடைப்பான் பொருத்தி நாள் ஒன்றுக்கு 213840 லிட்டர் ( 288 x 5 x 135 = 194400 say = 213840 லிட்டர் ) அளவில் பாதுகாக்கப்பட்ட குடிநீரினை கீழ் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் அடிப்படையிலும் மாநகராட்சி குடிநீர் உபவிதிகளின் அடிப்படையிலும் வழங்க நீரியியல் விபரப் படிக்கு மாநகர பொறியாளர், மாநகர ஆணையாளர் அவர்களின் அனுமதிக்குப் பொருள் வைக்கப்பட்டுள்ளது.

<u>**நிபந்தனைகள்**</u> :

1. குடியிருப்புகளுக்கு தற்போது பயன்பாட்டில் உள்ள குடிநீர் துணை விதிகளின்படி குடியிருப்பு பயன்பாட்டுக்கு உரிய வைப்புத் தொகை, ஒன்றுக்கு தலா ரூ.5000/-ம் வீதம் வாடகை குடியிருப்புகள் - 288 x 5000 = ரூ.1440000 கட்டணம் செலுத்த வேண்டும்.
2. பிற்காலங்களில் குடிநீர் உபவிதிகளின்படி வைப்புத் தொகை உயர்த்தப்பட வேண்டியிருப்பின் அம்மாற்றங்களுக்கு உட்பட்டு கூடுதல் வைப்புத் தொகை ஒவ்வொரு இணைப்பிற்கும் உரிமையாளரால் செலுத்தப்பட வேண்டும்.
3. தற்போது குடிநீர் விநியோக துணை விதிகளின்படி உபயோகிக்கப்பட்டு வரும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் 1000 லிட்டர் அளவிலான கொள்ளளவு குடிநீருக்கு ரூபாய் ஆறு (ரூ.6.00) வீதம் பயன்படுத்தப்படும் மொத்த குடிநீர் கொள்ளளவிற்கு குடிநீர் கட்டணம் வசூலிக்கப்படும் அல்லது ஒவ்வொரு குடியிருப்புக்கும் மாதாந்திர குறைந்தபட்ச குடிநீர் கட்டணமாக ரூ.72.00 வீதமும் மற்றும் ஒவ்வொரு குடியிருப்பு அல்லாத உபயோகத்திற்கு மாதாந்திர குறைந்த பட்ச குடிநீர் கட்டணமாக ரூ.150.00 வீதமும் ( அளவுமானி பராமரிப்புக் கட்டணம் தவிர்த்து ) கட்டணம் வசூலிக்கப்படும்.
4. பிற்காலங்களில் மாநகராட்சியால் குடிநீர் உபவிதிகளில் திருத்தம் செய்து உயர்த்தப்படும் குடிநீர் கட்டணத்தினை ஒவ்வொரு இணைப்பிற்கும் செலுத்தப்பட வேண்டும்.
5. அனுமதி பெற்று வழங்கப்படும் குடிநீர் இணைப்பினை மாநகராட்சி அனுமதியின்றி எவ்வித மாற்றமோ அல்லது பராமரிப்பு பணியோ செய்யக்கூடாது. அனுமதியின்றி விநியோக மெயின் மாற்றம் செய்யப்பட்டால் உடனடியாக குடிநீர் இணைப்பினை எவ்வித முன்னறிவிப்பின்றி துண்டிக்க மாநகராட்சிக்கு உரிமை உண்டு.
6. அனுமதி பெறும் இணைப்பிலிருந்து தற்போது சொத்துவரி விதிக்கப்பட்டுள்ள இதர கட்டிடத்திற்கு மட்டுமே குடிநீரினை பயன்படுத்தப்படல் வேண்டும். கட்டப்படும் இதர கட்டிடங்களுக்கு மேற்கண்ட இணைப்பினை நீட்டிக்கவோ அல்லது குடிநீரினை பயன்படுத்தவோ கூடாது. மீறும் பட்சத்தில் எவ்வித முன்னறிவிப்பின்றி துண்டிக்கப்படும்.
7. தற்போது நிர்ணயிக்கப்படும் கொள்ளளவு, மாநகராட்சியால் பெறப்படும் மொத்த குடிநீர் கொள்ளளவு மாறுபடும் நிலையில் வழங்கப்படும் அளவினை குறைக்கவோ அல்லது நிறுத்தவோ மாநகராட்சிக்கு முழு அதிகாரமுள்ளது.

**727-ன் தொடர்ச்சி**

8. தற்போது அமைக்கப்படும் குடிநீர் விநியோக மெயினை அவ்வப்போது ஆய்வு செய்ய மாநகராட்சிக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி ஆய்வு பணி மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும்.

**அலுவலகக் குறிப்பு** :

மாநகராட்சியால் நிர்ணயிக்கப்படும் நிபந்தனைகளுக்குட்பட்டு அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் 288 வாடகை குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் மொத்த அளவு முறையில் இணைப்பு வழங்க மாமன்றம் அனுமதி வழங்கலாம். ( இ.2 / 235 / 2019 / ம.2 )

------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது**.

----

**728)** திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட நெருப்பெரிச்சல் கிராம பகுதியில் (ஜெயா நகர்) அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் 256 வாடகை குடியிருப்புகள் கட்டிடம் நடைபெற்று வருகிறது. மேற்படி கட்டிடத்திற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் ( 256 x 5 x 135 = 172800 Say = 190080 லிட்டர்) அளவில் பாதுகாக்கப்பட்ட குடிநீரினை வழங்கக் கோரி விண்ணப்பித்துள்ளார். நெருப்பெரிச்சல் பகுதியில் உள்ள நிலமட்டத் தொட்டியில் இருந்து ஜெயா நகர் பகுதியில் கட்டப்பட்டு வரும் வாடகை குடியிருப்பு வளாகம் வரை குடிநீர் விநியோகக் குழாய் பதித்து அளவுமானி மற்றும் திருகு அடைப்பான் பொருத்தி நாள் ஒன்றுக்கு 190080 லிட்டர் ( 256 x 5 x 135 = 172800 say = 190080 லிட்டர் ) அளவில் பாதுகாக்கப்பட்ட குடிநீரினை கீழ் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் அடிப்படையிலும் மாநகராட்சி குடிநீர் உபவிதிகளின் அடிப்படையிலும் வழங்க நீரியியல் விபரப் படிக்கு மாநகர பொறியாளர், மாநகர ஆணையாளர் அவர்களின் அனுமதிக்குப் பொருள் வைக்கப்பட்டுள்ளது.

**நிபந்தனைகள்**

1. குடியிருப்புகளுக்கு தற்போது பயன்பாட்டில் உள்ள குடிநீர் துணை விதிகளின்படி குடியிருப்பு பயன்பாட்டுக்கு உரிய வைப்புத் தொகை, ஒன்றுக்கு தலா ரூ.5000/-ம் வீதம் வாடகை குடியிருப்புகள் - 256 x 5000 = ரூ.1280000 கட்டணம் செலுத்த வேண்டும்.
2. பிற்காலங்களில் குடிநீர் உபவிதிகளின்படி வைப்புத் தொகை உயர்த்தப்பட வேண்டியிருப்பின் அம்மாற்றங்களுக்கு உட்பட்டு கூடுதல் வைப்புத் தொகை ஒவ்வொரு இணைப்பிற்கும் உரிமையாளரால் செலுத்தப்பட வேண்டும்.
3. தற்போது குடிநீர் விநியோக துணை விதிகளின்படி உபயோகிக்கப்பட்டு வரும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் 1000 லிட்டர் அளவிலான கொள்ளளவு குடிநீருக்கு ரூபாய் ஆறு (ரூ.6.00) வீதம் பயன்படுத்தப்படும் மொத்த குடிநீர் கொள்ளளவிற்கு குடிநீர் கட்டணம் வசூலிக்கப்படும் அல்லது ஒவ்வொரு குடியிருப்புக்கும் மாதாந்திர குறைந்தபட்ச குடிநீர் கட்டணமாக ரூ.72.00 வீதமும் மற்றும் ஒவ்வொரு குடியிருப்பு அல்லாத உபயோகத்திற்கு மாதாந்திர குறைந்த பட்ச குடிநீர் கட்டணமாக ரூ.150.00 வீதமும் ( அளவுமானி பராமரிப்புக் கட்டணம் தவிர்த்து ) கட்டணம் வசூலிக்கப்படும்.
4. பிற்காலங்களில் மாநகராட்சியால் குடிநீர் உபவிதிகளில் திருத்தம் செய்து உயர்த்தப்படும் குடிநீர் கட்டணத்தினை ஒவ்வொரு இணைப்பிற்கும் செலுத்தப்பட வேண்டும்.

**728-ன் தொடர்ச்சி**

5. அனுமதி பெற்று வழங்கப்படும் குடிநீர் இணைப்பினை மாநகராட்சி அனுமதியின்றி எவ்வித மாற்றமோ அல்லது பராமரிப்பு பணியோ செய்யக் கூடாது. அனுமதியின்றி விநியோக மெயின் மாற்றம் செய்யப்பட்டால் உடனடியாக குடிநீர் இணைப்பினை எவ்வித முன்னறிவிப்பின்றி துண்டிக்க மாநகராட்சிக்கு உரிமை உண்டு.
6. அனுமதி பெறும் இணைப்பிலிருந்து தற்போது சொத்துவரி விதிக்கப்பட்டுள்ள கட்டிடத்திற்கு மட்டுமே குடிநீரினை பயன்படுத்தப்படல் வேண்டும். கட்டப்படும் இதர கட்டிடங்களுக்கு மேற்கண்ட இணைப்பினை நீட்டிக்கவோ அல்லது குடிநீரினை பயன்படுத்தவோ கூடாது. மீறும்பட்சத்தில் எவ்வித முன்னறிவிப்பின்றி துண்டிக்கப்படும்.
7. தற்போது நிர்ணயிக்கப்படும் கொள்ளளவு, மாநகராட்சியால் பெறப்படும் மொத்த குடிநீர் கொள்ளளவு மாறுபடும் நிலையில் வழங்கப்படும் அளவினை குறைக்கவோ அல்லது நிறுத்தவோ மாநகராட்சிக்கு முழு அதிகாரமுள்ளது.
8. தற்போது அமைக்கப்படும் குடிநீர் விநியோக மெயினை அவ்வப்போது ஆய்வு செய்ய மாநகராட்சி முழு ஒத்துழைப்பு வழங்கி ஆய்வு பணி மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும்.

**அலுவலகக் குறிப்பு** :

மாநகராட்சியால் நிர்ணயிக்கப்படும் நிபந்தனைகளுக்குட்பட்டு அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் 256 வாடகை குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் மொத்த அளவு முறையில் இணைப்பு வழங்க மாமன்றம் அனுமதி வழங்கலாம். ( இ.2 / 235 / 2019 / ம.2 )

-------

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

-----

**729)** திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட நெருப்பெரிச்சல் கிராம பகுதியில் (திருகுமரன் நகர்) அனைவருக்கும் வீடு திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு வரும் 1248 வாடகை குடியிருப்புகள் கட்டிடம் நடைபெற்று வருகிறது. மேற்படி கட்டிடத்திற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் (1248 x 300 = 374400 Say = 400000 லிட்டர்) அளவில் பாதுகாக்கப்பட்ட குடிநீரினை வழங்கக் கோரி விண்ணப்பித்துள்ளார். நெருப்பெரிச்சல் பகுதியில் உள்ள நிலமட்டத் தொட்டியில் இருந்து திருகுமரன் நகர் பகுதியில் கட்டப்பட்டு வரும் வாடகை குடியிருப்பு வளாகம் வரை குடிநீர் விநியோகக் குழாய் பதித்து அளவுமானி மற்றும் திருகு அடைப்பான் பொருத்தி நாள் ஒன்றுக்கு 400000 லிட்டர் ( 1248 x 300 = 374400 say = 400000 லிட்டர் ) அளவில் பாதுகாக்கப்பட்ட குடிநீரினை கீழ் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் அடிப்படையிலும் மாநகராட்சி குடிநீர் உபவிதிகளின் அடிப்படையிலும் வழங்க நீரியியல் விபரப்படிக்கு மாநகர பொறியாளர், மாநகர ஆணையாளர் அவர்களின் அனுமதிக்குப் பொருள் வைக்கப்பட்டுள்ளது.

**நிபந்தனைகள்**

1. குடியிருப்புகளுக்கு தற்போது பயன்பாட்டில் உள்ள குடிநீர் துணை விதிகளின்படி குடியிருப்பு பயன்பாட்டுக்கு உரிய வைப்புத் தொகை, ஒன்றுக்கு தலா ரூ.5000/-ம் வீதம் வாடகை குடியிருப்புகள் - 1248 x 5000 = ரூ.6240000 கட்டணம் செலுத்த வேண்டும்.

**729-ன் தொடர்ச்சி**

2. பிற்காலங்களில் குடிநீர் உபவிதிகளின்படி வைப்புத் தொகை உயர்த்தப்பட வேண்டியிருப்பின் அம்மாற்றங்களுக்கு உட்பட்டு கூடுதல் வைப்புத் தொகை ஒவ்வொரு இணைப்பிற்கும் உரிமையாளரால் செலுத்தப்பட வேண்டும்.
3. தற்போது குடிநீர் விநியோக துணை விதிகளின்படி உபயோகிக்கப்பட்டு வரும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் 1000 லிட்டர் அளவிலான கொள்ளளவு குடிநீருக்கு ரூபாய் ஆறு (ரூ.6.00) வீதம் பயன்படுத்தப்படும் மொத்த குடிநீர் கொள்ளளவிற்கு குடிநீர் கட்டணம் வசூலிக்கப்படும் அல்லது ஒவ்வொரு குடியிருப்புக்கும் மாதாந்திர குறைந்தபட்ச குடிநீர் கட்டணமாக ரூ.72.00 வீதமும் மற்றும் ஒவ்வொரு குடியிருப்பு அல்லாத உபயோகத்திற்கு மாதாந்திர குறைந்த பட்ச குடிநீர் கட்டணமாக ரூ.150.00 வீதமும் ( அளவுமானி பராமரிப்புக் கட்டணம் தவிர்த்து ) கட்டணம் வசூலிக்கப்படும்.
4. பிற்காலங்களில் மாநகராட்சியால் குடிநீர் உபவிதிகளில் திருத்தம் செய்து உயர்த்தப்படும் குடிநீர் கட்டணத்தினை ஒவ்வொரு இணைப்பிற்கும் செலுத்தப்பட வேண்டும்.
5. அனுமதி பெற்று வழங்கப்படும் குடிநீர் இணைப்பினை மாநகராட்சி அனுமதியின்றி எவ்வித மாற்றமோ அல்லது பராமரிப்பு பணியோ செய்யக்கூடாது. அனுமதியின்றி விநியோக மெயின் மாற்றம் செய்யப்பட்டால் உடனடியாக குடிநீர் இணைப்பினை எவ்வித முன்னறிவிப்பின்றி துண்டிக்க மாநகராட்சிக்கு உரிமை உண்டு.
6. அனுமதி பெறும் இணைப்பிலிருந்து தற்போது சொத்துவரி விதிக்கப்பட்டுள்ள கட்டிடத்திற்கு மட்டுமே குடிநீரினை பயன்படுத்தப்படல் வேண்டும். கட்டப்படும் இதர கட்டிடங்களுக்கு மேற்கண்ட இணைப்பினை நீட்டிக்கவோ அல்லது குடிநீரினை பயன்படுத்தவோ கூடாது. மீறும் பட்சத்தில் எவ்வித முன்னறிவிப்பின்றி துண்டிக்கப்படும்.
7. தற்போது நிர்ணயிக்கப்படும் கொள்ளளவு, மாநகராட்சியால் பெறப்படும் மொத்த குடிநீர் கொள்ளளவு மாறுபடும் நிலையில் வழங்கப்படும் அளவினை குறைக்கவோ அல்லது நிறுத்தவோ மாநகராட்சிக்கு முழு அதிகாரமுள்ளது.
8. தற்போது அமைக்கப்படும் குடிநீர் விநியோக மெயினை அவ்வப்போது ஆய்வு செய்ய மாநகராட்சி முழு ஒத்துழைப்பு வழங்கி ஆய்வு பணி மேற்கொள்ள அனுமதிக்க வேண்டும்.

**அலுவலகக் குறிப்பு** :

மாநகராட்சியால் நிர்ணயிக்கப்படும் நிபந்தனைகளுக்குட்பட்டு அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் 1248 வாடகை குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் மொத்த அளவு முறையில் இணைப்பு வழங்க மாமன்றம் அனுமதி வழங்கலாம். ( இ.1 / 501 / 2019 / ம.2)

------

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

-----

**730)** திருப்பூர் மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளில் உள்ள பாதாள சாக்கடைத் திட்டம் மத்திய அரசின் அம்ரூத் 2017-20 திட்டத்தின் கீழ் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணியின் 4 சிப்பங்களில் சிப்பம் 1-க்கு திருத்திய தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி அழைப்பு வெளியிடப்பட்டதில், அகிர இந்திய அளவில் ஒரு ஆங்கில நாளிதழில் மற்றும் மாநில அளவில் ஒரு தமிழ் நாளிதழிலும்

**730-ன் தொடர்ச்சி**

விளம்பரம் செய்யப்பட்டது. அதற்கான பட்டியல் தொகை ரூ.15,09,984/-ஐ வழங்கக் கோரி மேற்படி ஒப்பந்தப்புள்ளி அழைப்பினை விளம்பரம் செய்த திருவாளர்கள். Bright Advertising நிறுவனம் பட்டியல் (Bill No.7384, Dated 27-09-2019) சமர்ப்பித்துள்ளன. மேற்படி விளம்பர செலவினத்தை பாதாள சாக்கடைத் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியிலிருந்து வழங்க ஆணையர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி விளம்பர செலவினம் மாமன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : பதிவு செய்யலாம். (இ.1 / 4813 / 2017 )

--------

## தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது

------

**731)** தனிவட்டாட்சியர் சமூக பாதுகாப்புத் திட்டம், திருப்பூர் வடக்கு அவர்களின் ந.க.எண். 0028 / 2019 / சி.1, நாள் 15-10-2019-ம் தேதிய கடிதத்தின்படியும், தனி வட்டாட்சியர் சமூக பாதுகாப்புத் திட்டம் திருப்பூர் தெற்கு அவர்களின் ந.க.எண்.2614/2019/ஆ.1, நாள் 03-10-2019-ம் தேதிய கடிதத்தின்படியும் இந்திரா காந்தி முதியோர் உதவித் தொகை மற்றும் விதவைகளுக்கான உதவித் தொகை வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு குறைதீர்க்கும் முகாமில் மனு அளித்தவர்களில் திருப்பூ வடக்கு வட்டாட்சியர் அவர்களின் பரிந்துரையில் 614 மற்றும் தெற்கு வட்டாட்சியர் அவர்களின் பரிந்துரையில் 50 நபர்களுக்கும் சம்மந்தப்பட்ட கிராம அலுவலர்கள் புலதணிக்கை செய்து ஒய்வூதியம் வழங்க தேர்வு செய்யப்பட்டு மாநகராட்சியில் உள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியலில் சேர்த்து புதிய வரிசை எண் வழங்கி அனுப்பும்படி கேட்டுள்ளார்கள்.

தற்போது மாநகராட்சியில் உள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியலில் வட்டாட்சியர்கள், சமூக பாதுகாப்புத் திட்டம், வடக்கு மற்றும் தெற்கு திருப்பூர் அவர்களால் அனுப்பப்பட்ட 664 நபர்களுக்கு பட்டியலில் பெயர் இடம் பெறாததால் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியலில் சேர்த்து புதிய வரிசை எண் வழங்க மாமன்றப் பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோர் பட்டியலில் புதிய வரிசை எண் வழங்குவதை மேற்கண்ட இத்திட்டத்திற்கு மட்டும் பயன்படுத்த ஒப்புதல் அளிக்கலாம்.

( ந.க.எண். எச்.2 / 505 / 2010 )

--------

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

------

(ஒம்) க.சிவகுமார், எம்.ஏ.,
தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி.

// உண்மை நகல் //

ஆணையருக்காக,
திருப்பூர் மாநகராட்சி.

## திருப்பூர் மாநகராட்சி

**2019 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.**

**முன்னிலை : திரு.க.சிவகுமார், எம்.ஏ.,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்,**
**திருப்பூர் மாநகராட்சி.**

******

**732)** திருப்பூர் மாநகராட்சி, மண்டலம் எண்.4, நல்லூர் கிராமம், க.ச.எண். 715/4-ல் ( சர்வே வார்டு - 'O' , பிளாக் -5, நகரளவு எண்.31 / 3.31 / 4 ) அமைந்துள்ள 0.95 ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க உத்தேசித்து திரு.P. அருண் என்பவர் விண்ணப்பித்து இருந்ததின் பேரில் உறுப்பினர் செயலர், திருப்பூர் உள்ளூர் திட்ட குழுமம் அவர்களின் ந.க.எண். 2298/2018/தி.உ.தி.கு. நாள் 03-01-2019-ந் தேதிய கடிதத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு சாலை அமைப்பு தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம் தயார் செய்து அனுப்பி வைக்கப்பட்டது.

உறுப்பினர் செயலர், திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள சாலை ஒப்படைப்பு வரைபடத்தின்படி குடிநீர் பிரதானக் குழாய் மழைநீர் வடிகால், சிறுபாலம், தார்சாலை ஆகியவை மாநகராட்சி நிர்ணயம் செய்துள்ள தரத்தில் மனுதாரரால் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் தெருவிளக்கு கம்பங்கள் அமைக்க ரூ.2,00,000/- மாநகராட்சிக்கு செலுத்துச் சீட்டு எண். 032 / 501 /5 / 19-20/0003238 நாள் 25-10-2019-ல் செலுத்தப்பட்டு உள்ளது.

உறுப்பினர் செயலர், திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களால் ஒப்புதலளித்துள்ள சாலை வரைபடத்தின்படி உத்தேச மனைப்பிரிவு சாலைகளை மாநகராட்சியின் பராமரிப்புக்கு தானமாக வழங்கிய தான சாசனப் பத்திரம் எண்.2820/2019 நாள் 07-05-2019-ல் ஏற்றுக் கொண்டும் உறுப்பினர் செயலர், திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களால் வழங்கப்பட்ட இறுதி ஒப்புதல் ம.வ./தி.உ.தி.கு. எண். 40 / 2019 என்ற எண்ணில் வழங்கப்பட்டு உள்ளது. எனவே மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :**

உறுப்பினர் செயலர், திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம் ஒப்புதல் அளித்துள்ள சாலை ஒப்படைப்பு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள சாலைகளை மாநகராட்சியின் பராமரிப்பிற்கு தானமாக ஏற்றுக் கொண்டும், உறுப்பினர் செயலர், திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களால் வழங்கப்பட்ட ஒப்புதலின்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

( ந.க.எண்.இ.1 / 3553 /2018/ம.4)

------

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

------

**733)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.4, வீரபாண்டி கிராமம் க.ச.எண்.11 /2G2A-ல் அமைந்துள்ள 1.16¼ ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க உத்தேசித்து திரு.என்.வேலுசாமி, திரு.என்.மோகன்ராஜ், திரு.என்.சிவசுப்ரமணியம் ஆகியோர் விண்ணப்பித்து இருந்ததின் பேரில் உறுப்பினர் செயலர், திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் ந.க.எண். 100 / 2019 / தி.உ.தி.கு. நாள் 22-02-2019-ந் தேதிய கடிதத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு சாலை அமைப்பு தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம் தயார் செய்து அனுப்பி வைக்கப்பட்டது.

**733-ன் தொடர்ச்சி**

உறுப்பினர் செயலர், திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள சாலை ஒப்படைப்பு வரைபடத்தின்படி குடிநீர் பிரதானக் குழாய் மழைநீர் வடிகால், சிறுபாலம், தார்சாலை ஆகியவை மாநகராட்சி நிர்ணயம் செய்துள்ள தரத்தில் மனுதாரரால் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் தெருவிளக்கு கம்பங்கள் அமைக்க ரூ.1,50000/-மாநகராட்சிக்கு செலுத்துசீட்டு எண்.032/501/15/19-20/001267 நாள் 05-07-2019-ல் செலுத்தப்பட்டு உள்ளது.

உறுப்பினர் செயலர், திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களால் ஒப்புதலளித்துள்ள சாலை வரைபடத்தின்படி உத்தேச மனைப்பிவு சாலைகளை மாநகராட்சியின் பராமரிப்புக்கு தானமாக வழங்கிய தான சாசனப் பத்திரம் எண்.3484/2019 நாள் 20-08-2019-ல் ஏற்றுக் கொண்டும் உறுப்பினர் செயலர், திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களால் இறுதி ஒப்புதல் ம.வ. / தி.உ.தி.கு.எண். 39 / 2019 என்ற எண்ணில் வழங்கப்பட்டு உள்ளது. எனவே மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு** :

உறுப்பினர் செயலர், திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம் ஒப்புதல் அளித்துள்ள சாலை ஒப்படைப்பு வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள சாலைகளை மாநகராட்சியின் பராமரிப்பிற்கு தானமாக ஏற்றுக் கொண்டும், உறுப்பினர் செயலர், திருப்பூர் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களால் வழங்கப்பட்ட ஒப்புதலின்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.இ.1 / 1682 / 2019 / ம.4)

------

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

------

**734)** திருப்பூர் மாநகராட்சி பகுதிகளில் கொசுவினால் பரவும் வைரஸ் நோய்கள் மற்றும் மலேரியா, யானைகால் நோய்களை கட்டுப்படுத்த தேவையான தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள, இம்மாநகராட்சி பகுதிகளில் வீடுகளில் உள்ள கழிவுநீர் நச்சுத்தொட்டியில் (Septic Tank) இருந்து கொசுக்கள் உற்பத்தியாகி வெளிவருகிறது. அவற்றை கட்டுப்படுத்தவும் நோய்கள் பரவாமல் தடுக்கவும் அனைத்து கழிவுநீர் நச்சுத் தொட்டியில் உள்ள காற்று புகு குழாயில் ( Septic Tank Vent Pipe ) கொசு வலை கட்ட வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே மேற்கண்ட கொசுக்களை கட்டுப்படுத்த திருப்பூர் மாநகராட்சி பகுதியில் 2,86,386 குடியிருப்புகள் உள்ளன. அவற்றில் பெருமளவு எண்ணிக்கையில் கழிவுநீர் நச்சு தொட்டிகள் உள்ளன. எனவே பொது சுகாதார நலன் கருதி அவசர அவசியம் முன்னிட்டு அனைத்து கழிவுநீர் நச்சுத் தொட்டியில் உள்ள காற்றுபுகு குழாய்க்கு கொசுவலை கட்ட வேண்டியுள்ளதால் முதற்கட்டமாக 60000 எண்ணிக்கையில் கொசு வலை (1½ அடி நீளம் 1 அடி அகலம் கொண்ட துணியினால் தைத்த நாடாவுடன் கூடிய முதல் தரமான கெமிக்கல் கோட்டின் செய்து ஒரு ஸ்கொயர் M.M.-க்கு 200 துளைகள் கொண்ட ) வாங்க நிர்வாக அனுமதியும் மற்றும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.9.90இலட்சத்திற்கும் திருப்பூர் மாநகராட்சி சட்டம் 2008 பிரிவு 101உட்பிரிவு 2(b)ன்படி ஆணையர் அவர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு மேல்நடவடிக்கை மேற்கொண்டு 16-10-2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டன. அதன்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

**734-ன் தொடர்ச்சி**

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. |
|---|---|---|
| 1 | M/s. Sri Velan Agency,<br>46, Kavilipalayam pudur,<br>Vanjipalayam Road, Tiruppur-3. | 9,48,720.00 |
| 2 | TNSS Apparels,<br>14-3A, Kunnangalkadu 3rd street,<br>Selvi Furniture Back side,<br>Kangayam Road, Tiruppur-4 | 10,05,360.00 |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய வ.எண்.1ல் கண்ட M/s. Sri Velan Agency, Tiruppur -3 என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால், மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

மாமன்றம் அனுமதி வழங்கலாம். ( எச்.1 / 5478 / 2019)

------

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது

------

**735)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.1-க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். TN 39 AJ 4538 வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்யும் பணிக்கு 16-10-2019 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. |
|---|---|---|
| 1. | திருவாளர் J.D. & Co.,<br>160, கோயம்புத்தூர் ரோடு, பொள்ளாச்சி | 98,000/- |
| 2. | திருவாளர் BP.B. Sheriff Auto Diesel Works,<br>27/7, A.B.T. Road, பொள்ளாச்சி | 1,06,500/- |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திருவாளர். J.D. & Co., 160, கோயம்புத்தூர் ரோடு, பொள்ளாச்சி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு :**

அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர். J.D. & Co.,160, கோயம்புத்தூர் ரோடு, பொள்ளாச்சி என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம். ( H.1 / 3241 /2019)

------

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

------

**736)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.1-க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். TN 39 BU 7023 வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்யும் பணிக்கு 16-10-2019 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. |
|---|---|---|
| 1. | திருவாளர் மேட்டுப்பாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர், போயம்பாளையம், திருப்பூர் | 39,680/- |
| 2. | திருவாளர் பெஸ்ட் மோட்டார் ஓர்க்ஸ்,<br>ஓடாந்துரை, மேட்டுப்பாளையம் | 39,890/- |

**736-ன் தொடர்ச்சி**

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திருவாளர். மேட்டுப்பாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர், போயம்பாளையம், திருப்பூர் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர். மேட்டுப்பாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர், போயம்பாளையம், திருப்பூர் என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம். ( H.1 / 3243 /2019 )

------

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

------

**737)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.1-க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். TN 42 F 1986 வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்யும் பணிக்கு 16-10-2019 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. |
|---|---|---|
| 1. | திருவாளர் மேட்டுப்பாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர், போயம்பாளையம், திருப்பூர் | 97,790/- |
| 2. | திருவாளர் பெஸ்ட் மோட்டார் ஒர்க்ஸ், ஓடாந்துரை, மேட்டுப்பாளையம் | 97,890/- |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திருவாளர். மேட்டுப்பாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர், போயம்பாளையம், திருப்பூர் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர். மேட்டுப்பாளையம் ஆட்டோ சர்வீஸ் சென்டர், போயம்பாளையம், திருப்பூர் என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம். ( H.1 / 4958 /2019)

------

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

------

**738)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.1-க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். TN 39 CA 3468 வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்யும் பணிக்கு 16-10-2019 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. |
|---|---|---|
| 1. | திருவாளர் J.V.K. Auto Diesel Works, காலராம்பட் மெயின்ரோடு, சேலம் | 36,350/- |
| 2. | திருவாளர் Lakshmi Auto Diesel Works, ஓர்க் ஷாப் கார்னர், மேட்டூர் டேம் | 34,130/- |

**738-ன் தொடர்ச்சி**

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திருவாளர். Lakshmi Auto Diesel Works, ஓர்க் ஷாப் கார்னர், மேட்டூர் டேம் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர். Lakshmi Auto Diesel Works, ஓர்க் ஷாப் கார்னர், மேட்டூர் டேம் என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம். ( H.1 / 4959 /2019)

------

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

------

**739)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.4-க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பொது சுகாதாரப் பிரிவு 14 எண்ணிக்கையியலான வாகனங்களுக்கு புதிய டயர் மற்றும் டியூப் மாற்றும் பணி மேற்கொள்ள 25-10-“019 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | விபரம் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.. |
|---|---|---|---|
| 1. | S.M.S.Tyres, PN Road, Tiruppur | 14 No's வாகனங்களுக்கு புதியதாக டயர் மற்றும் டியூப் மாற்றம் செய்யும் பணி அளவு / 145 R 12 | 2,40,800/- |
| 2. | Friends Tyres, Avinashi Road, Tiruppur | | 2,35,200/- |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திருவாளர். Friends Tyres,Avinashi Road, Tiruppur என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக இருப்பதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர். Friends Tyres,Avinashi Road, Tiruppur என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

( H.1 / 5252 /2019)

------

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

------

**740)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.II -க்குட்பட்ட புதிய பேருந்து நிலையம் முதல்தள கடை எண்.2, 5-க்கு நீண்ட காலமாக யாரும் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவில்லை. மேலும் 24-07-2019-ந் தேதி நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் திரு.சி.குமார் என்பவர் புதிய பேருந்து நிலையம் முதல்தள கடை எண்.2-க்கு மாத வாடகை ரூ.2500/-க்கு கோரியுள்ளார். புதிய பேருந்து நிலையம் முதல்தள கடை எண்.5-க்கு மாத வாடகை ரூ.2500/-க்கு திரு. நித்தியானந்தம் என்பவர் கோரியுள்ளார். மேலும் மேற்காணும் கடைகளுக்கு யாரும் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவில்லை.

**740-ன் தொடர்ச்சி**

எனவே தற்பொழுது புதிய பேருந்துநிலையம் முதல்தள கடை எண்.2,மற்றும்5-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளவர்களுக்கு கடையை மாத வாடகைக்கு ஒப்படைக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(2) திருப்பூர் மாநகராட்சி மண்டலம் எண்.4-க்குட்பட்ட ஜெய்வாபாய் பள்ளி கடை எண்.17-க்கு திரு.சென்னியப்பன் என்பவர் மாத வாடகை ரூ.6100/-க்கு கோரியுள்ளார். மறுமதிப்பீட்டு மாத வாடகை ரூ.4240/-க்கு கூடுதலாக ரூ.1860/-க்கு கோரியுள்ளார். மேலும் இதுநாள் வரையிலும் மேற்காணும் கடைக்கு மாத வாடகையைவிட கூடுதலாக யாரும் கோரவில்லை.

எனவே மேற்காணும் ஜெய்வாபாய் பள்ளி வீதி மாநகராட்சி கடை எண்.17யை திரு சென்னியப்பன் என்பவருக்கு மாத வாடகைக்கு ஒப்படைக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : அனுமதி வழங்கலாம். **(அ.1 / 6236 / 2018)**

--------

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது

------

**741)** நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-5 அவர்களின் D.O,.கடித எண்.1588/2015 / ஜே.1, நாள் 15.06,2015, 28-03-2016 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-5 அவர்களின் கடித ந.க.எண். 2571./J1/2017 நாள் 14-12-2017ன் படி திருப்பூர் மாநகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் மற்றும் இதர கொசுவினால் பரவும் நோயினை கட்டுப்படுத்த தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே பார்வையில் கண்டுள்ள உத்திரவில் 300 குடும்பங்களுக்கு ஒரு கொசு தடுப்பு பணியாளர் (DBC)வீதம் தற்காலிகமாக நிர்ணயம் செய்ய உத்திரவிடப்பட்டு உள்ளது. இம்மாநகராட்சியில் 60 வார்டு பகுதிகளிலும் கொசு தடுப்பு பணியினை மேற்கொள்ள மலேரியா பணியாளர்கள் பற்றாக்குறையாக இருப்பதாலும், தற்போது டெங்கு நோய் பரவாமல் கட்டுப்படுத்த தினமும் மாநகராட்சி பகுதியில் உள்ள அரசு / தனியார் மருத்துவமனைகளிலிருந்து தினசரி காய்ச்சல் கண்டவர்களின் பட்டியல் பெறப்பட்டு ஆறுநாள் வட்ட சுழற்சி அடிப்படையில் பணிபுரிய ஏதுவாக மண்டலம் ஒன்றிற்கு நாளொன்றுக்கு 125 நபர்கள் வீதம் நான்கு மண்டலங்களுக்கு தினசரி மொத்தம் 500 DBC பணியாளர்களை அவசர அவசியம் கருதி பொது சுகாதார நலனை முன்னிட்டு 01-11-2019 முதல் 30-11-2019 வரையுள்ள காலத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி அடிப்படையில் ( நாள் ஒன்றுக்கு ரூ.286/-) மகளிர் சுயஉதவிக்குழு பணியாளர்கள் / இதர தற்காலிக பணியாளர்களை கொண்டு மேற்படி பணிக்கு அமர்த்தி பணிபுரிய நிர்வாக அனுமதியும் மற்றும் இதற்காகும் உத்தேச செலவீனம் ரூ.37.50 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

1. செலவீனத்திற்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. இம்மாநகரில் டெங்கு காய்ச்சல் மற்றும் இதர கொசுவினால் பரவும் நோயினை கட்டுப்படுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள அவசர அவசியம் கருதி 01-11-2019 முதல் 30-11-2019 வரையுள்ள காலத்திற்கு மட்டும் தினக்கூலி அடிப்படையில் தினசரி 500 DBC பணியாளர்களை பணியமர்த்த மாமன்றம் அனுமதிக்கலாம். ( எச்.1 / 0617 / 2019 )

------

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

------

**742)** திருப்பூர் மாநகராட்சி பகுதியில் அம்ரூத் 2015-16 திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் விரிவடைந்த பகுதிகளில் நடைபெற்று வரும் குடிநீர் பகிர்மானக் குழாய் பதிக்கும் பணிக்கு வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு 33100 எண்ணிக்கையிலும், வணிக நிறுவனத்திற்கு 7100 எண்ணிக்கையும் ஆக மொத்தம் 40200 என நிர்ணயித்து விரிவான திட்ட அறிக்கையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் வணிக பயன்பாட்டிற்கான இணைப்புகளில் நிர்ணயிக்கப்பட்ட அளவிற்கு இணைப்புகள் கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை என்பதால் வீட்டு உபயோத்திற்கு அதிகப்படியான இணைப்புகள் வழங்கலாம் எனவும், வணிக நிறுவனங்களுக்கு இணைப்புகள் நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கையில் இருந்த குறைக்கலாம் என தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாரின் கடிதம் ந.க.எண்.5689 / F / AMRUT / HSC / DO / RWS / TPR / 2019 - 20 Dated 16-10-2019 கடிதத்தில் வீடுகளுக்கான இணைப்புகள் 38708 எனவும், வணிக பயன்பாட்டிற்கான இணைப்புகள் 1492 எனவும் இதற்கான மாமன்ற அனுமதி கோரப்பட்டுள்ளது. திருப்பூர் மாநகராட்சியின் குடிநீர் விநியோக உபவிதிகள் 6ன்படி வீட்டு குழாய் இணைப்பிற்கு பயன்படுத்தப்படும் குழாய் அளவான அங்குள்ள கட்டுப்பாட்டு கருவி, தண்ணீர் வேகம், நீரழுத்தம் போன்றவற்றிற்கு தகுந்தபடியும், நீரிலிருந்து கட்டிடத்தின் தூரத்திற்கு தக்கவாறு ஆணையர் அவர்களால் நிர்ணயிக்கப்படும் குழாய் விகிதாசாரப்படி 30 மீட்டருக்கு குறைவாக உள்ள இணைப்பிற்கு 15 எம்.எம். விட்டமுள்ள குழாயும், மற்ற இடங்களுக்கு ( 30 மீட்டருக்கும் அதிகமாக உள்ளது) 20 எம்.எம். விட்டமுள்ள குழாய் பயன்படுத்த வேண்டும் என உள்ளது. மேலும் வளாக உபயோகத்திற்கு நீர் தேவையின் அளவினை பொறுத்து வடிவமைப்பு செய்து வரும் விட்ட குழாய் பதிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது. (Based on design requirement).எனவே இந்த உபவிதிகளுக்கு உட்பட்டு குழாய் பதிக்குமாறும், குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளரின் 16-10-2019ம் தேதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வீட்டு இணைப்புகளின் எண்ணிக்கை 38708 எனவும், வணிக பயன்பாட்டிற்கான இணைப்புகள் 1492 எனவும் ஆக மொத்தம் 40200 எண்ணிக்கையில் இணைப்புகள் வழங்க அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :மாமன்றம் அனுமதி வழங்கலாம். ( இ.1 / 5577 /2017)

-------

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது

------

**743)** திருப்பூர் மாநகராட்சி காமராஜர் சாலையில் உள்ள பழைய பேருந்து நிலையம் மற்றும் பெருமாநல்லூர் சாலையிலுள்ள புதிய பேருந்து நிலையம் ஆகியவை பராமரிக்கப்பட்டு வருகிறது. இரண்டு பேருந்து நிலையங்களில் தினசரி வெளியூர் மற்றும் உள்ளூர் பயணிகள் சுமார் 2,00,000 பேர் அந்த பேருந்து நிலையங்களை பயன்படுத்தி வருகின்றனர். எனவே திருப்பூர் மாநகராட்சியிலுள்ள இரண்டு பேருந்து நிலையங்களையும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பராமரிக்க வேண்டியது அவசியமாகிறது.

பேருந்து நிலையங்களை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரிக்க பகல் மற்றும் இரவு நேரப் பணிக்கு ஒவ்வொரு பேருந்து நிலையத்திற்கும் துப்புரவு பணிக்காக தலா 4 நபர்கள் வீதமும், கழிவறைகளை சுத்தம் செய்யும் பணிக்கு தலா 2 நபர்கள் வீதம் ஆக மொத்தம் 6 நபர்கள் தேவைப்படுகின்றனர். இந்நிலையில் இரண்டு பேருந்து நிலையங்களுக்கும் மொத்தம் 12 நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

**743-ன் தொடர்ச்சி**

மேலும் பேருந்து நிலைய பயணிகள் காத்திருக்கும் பகுதிகளில் தனி நபர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு பேருந்து நிலையத்திற்கு உட்புறமுள்ள காலியிடங்களில் அங்கீகாரமற்ற தள்ளுவண்டி கடைகள் மற்றும் தலைச்சுமை வியாபாரிகள் ஆக்கிரமிப்பு செய்து பயணிகளுக்கு மிகவும் தொந்தரவு ஏற்படுத்தி வருகின்றனர். எனவே ஆக்கிரமிப்புகள் ஏற்படா வண்ணம் தடுக்கும் பொருட்டு ஒவ்வொரு பேருந்து நிலையத்திற்கும் பகலில் இரண்டு பாதுகாவலர்களும், இரவில் இரண்டு பாதுகாவலர்களும் தேவைப்படுகின்றனர். பழைய மற்றும் புதிய பேருந்து நிலைய இரவு திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கும் பேருந்து நிலைய பாதுகாப்பு பணிக்கும் தேவையான 20 நபர்களை ஊதிய விகித அடிப்படையில் நியமனம் செய்தால் ஏற்படும் செலவின விபரம் பின்வருமாறு.

| வ. எண். | பணியிடம் | பழைய பேருந்து நிலையம் | புதிய பேருந்து நிலையம் | மொத்த பணியா ளர்கள் | ஊதிய விகிதம்படி வழங்கப்பட வேண்டிய மாதாந்திர ஊதியம் | ஆண்டு ஒன்றுக்கு செலவினம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | துப்புரவு பணியாளர் | 6 | 6 | 12 | 15700 | 22.60.800/- |
| 2 | இரவுக் காவலர் | 4 | 4 | 8 | 15700 | 15,70,200/- |
| | | | | | | 38,31,000/- |

பழைய மற்றும் புதிய பேருந்து நிலைய இரவு நேர திடக்கழிவு மேலாண்மை பணிக்கும், பேருந்து நிலைய பாதுகாப்பு பணிக்கும் தேவையான 20 நபர்களை ஊதிய விகித அடிப்படையில் நியமனம் செய்தால் ரூ.38.31 இலட்சம் செலவாகும். தற்போது பணியாளர் பற்றாக்குறையாக உள்ள சூழ்நிலையில் பேருந்து நிலையங்களை சுத்தம் செய்தல் மற்றும் பாதுகாப்பு பணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயம் செய்த விலைவிபரப் பட்டியலின்படி Out sourcing முறையில் நியமனம் செய்யலாம். இதற்கான உத்தேச செலவு விபரம் பின்வருமாறு.

| வ. எண். | பணியிடம் | எண்ணிக்கை | மாவட்ட ஆட்சித் தலைவர் விலைவிகித அடிப்படையில் தினக்கூலி ரூ. | ஓர் ஆண்டு செலவினம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | துப்புரவு பணியாளர் | 12 | 320/- | 14,01,600/- |
| 2 | இரவுக் காவலர் | 8 | 273/- | 7,97,160/- |
| | **மொத்தம்** | **20** | | 21,98,160/- |
| 3. | தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி 13.85% | | | 3,04,528/- |
| 4. | சேவை வரி 18% | | | 3,95,777/- |
| 5. | சீருடை செலவினம் | | ஆண்டொன்றுக்கு ரூ.1000/- வீதம் | 20,000/- |
| 6. | Over head charges 10/00% | | | 2,19,876/- |
| 7. | **Grand Total** | | | **31,38,941/-** |

மேற்காணும் 20 பணியிடங்களுக்கும் ஊதிய விகித அடிப்படையில் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டால் ஊதியம் மற்றும் இதர செலவினங்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.38.31 இலட்சம் செலவாகும். ஆனால் மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயம் செய்த தினக்கூலி அடிப்படையில் பணியாளர் நியமனம் செய்யப்பட்டால் ரூ.31.38 இலட்சம் மட்டுமே செலவாகும்.

இதனால் ஆண்டொன்றுக்கு ரூ.6.92 இலட்சம் மாநகராட்சிக்கு சேமிப்பு ஏற்படுகிறது.

**743-ன் தொடர்ச்சி**

எனவே பேருந்து நிலைய பராமரிப்பு பணிக்கு தற்காலிக அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயித்த விலைவிகித அடிப்படையில் OUT SOURCING முறையில் 01-12-2019 முதல் ஓராண்டிற்கு பணியாளர்களை நியமித்து பணிகளை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம். (இ.1 / 4805 / 2018)

-------

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது

------

**744)** திருப்பூர் மாநகராட்சி பராமரிப்பில் பவானி ஆற்றில் நீரை ஆதராமாகக் கொண்ட முதலாவது குடிநீர் திட்டத்தின், தலைமை நீர்நிலையத்தில் பவானி ஆற்றிலிருந்து நீரினை இறைத்து வடிகட்டி சுத்தநீர் தலைமை நிலையத்திலிருந்து நடூர், பொகளூர், மற்றும் நம்பியாம்பாளையம் ஆகிய மூன்று நீருந்து நிலையங்களின் வழியாக திருப்பூர் மாநகரம் அவினாசி சாலையிலுள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிக்கு உந்தப்பட்டு வருகிறது.

மூன்றாவது குடிநீர்த் திட்டம் காவேரி ஆற்று நீரை ஆதாரமாகக் கொண்டு புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகத்தினரால் பராமக்கரிப்பட்டு, இம்மாநகரில் உள்ள 8 நீர்த்தேக்க தொட்டிகளுக்கு நீர் விநியோகிக்கப்படுகிறது. விரிவாக்கம் செய்யப்படாத மாநகராட்சி பகுதியில் உள்ள 9 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், இணைக்கப்பட்ட உள்ளாட்சிப் பகுதிகளில் 274 குடிநீர் தொட்டிகள் ஆக மொத்தம் 283 குடிநீர்த் தேக்கத் தொட்டிகளிலிருந்து குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மாநகரில் 1261.54 கிலோமீட்டர் நீளத்திற்கு குடிநீர் விநியோகக் குழாய்கள் பதிக்கப்பட்டு 2351 வால்வுகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஒருங்கிணைந்த திருப்பூர் மாநகராட்சியில் 161381 குடிநீர் இணைப்புகள் உள்ளன. மேலும் குடிநீர் அல்லாத உபயோகத்திற்காக 1323 ஆழ்குழாய் கிணறு மற்றும் திறந்த வெளிக் கிணறுகள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு மாநகரில் குடிநீர் அல்லாத உபயோகத்திற்கு குடிநீரை பயன்படுத்துவது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அரசு குறியீட்டின்படி மேலே குறிப்பிட்டுள்ள பணியாற்ற நாளொன்றுக்கு எட்டுமணி நேர பணிக்கு ஒரு பணியாளர் வீதம் கீழ்க்கண்டுள்ளவாறு பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

| TIRUPPUR CITY MUNICIPAL CORPORATION | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| DETAILS OF MOTORS PUMPS AND GENSETS PROVIDED IN PUMPING STATION (WDS) | | | | | | | | |
| Sl. No. | Location of Pumping Station | Motors | | PIMP | | Generator capacity | இரவுக் காவலர் | செயல் திறனற்ற பணியாளர்கள் |
| | | KW | H.P | TYPE | Head Mts | K.V.A. | | |
| 1 | Bishop School | 88.5 | 120 | Turbine | 25 | 160 KVA | 1 | 3 |
| 2 | New R.K.Puram | 90 | 120 | Turbine | 25 | 160 KVA | 1 | 3 |
| 3 | Bharathiyar Complex | 55 | 75 | Turbine | 25 | 160 KVA | 1 | 3 |
| 4 | Rayapuram | 55 | 75 | Turbine | 25 | 100 KVA | 1 | 3 |
| 5 | Poochakadu | 55 | 75 | Turbine | 25 | 100 KVA | 1 | 3 |
| 6 | Thennampalayam | 22 | 30 | Turbine | 25 | 50 KVA | 1 | 3 |
| 7 | Perichipalayam | 37 | 50 | Turbine | 25 | 100 KVA | 1 | 3 |
| 8 | Booster (Perichipalayam) | 15 | 20 | Turbine | 25 | | 1 | |
| 9 | Dharapuram Road (Perichipalayam) | 75 | 100 | Turbine | 40 | 140 KVA | 1 | |
| 10 | Vinoba Nagar | 30 | 40 | Turbine | 25 | 62.5 KVA | 1 | 2 |

| TIRUPPUR CITY MUNICIPAL CORPORATION | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| DETAILS OF MOTORS PUMPS AND GENSETS PROVIDED IN PUMPING STATION (WDS) | | | | | | | | |
| Sl. No. | Location of Pumping Station | Motors | | PIMP | | Generator capacity | இரவுக் காவலர் | செயல் திறனற்ற பணியா ளர்கள் |
| | | KW | H.P | TYPE | Head Mts | K.V.A. | | |
| 11 | EB Colony I | 14.7 | 20 | Mono block | 28 | 40 KVA | 1 | 2 |
| 12 | Vengamedu | 20.21 | 27.5 | -do- | 28mts | 40 KVA | 1 | 2 |
| 13 | EB Colony II | 0.74 | 10 | -do- | 28mts | 15 KVA | 1 | 2 |
| 14 | Anuparpalayam | 7.4 | 10 | -do- | 28mts | 15 KVA | 1 | 2 |
| 15 | Indira Nagar | 11.32 | 15 | -do- | 28mts | 25 KVA | 1 | 3 |
| 16 | Avinashi Goundampalayam | 7.35 | 10 | -do- | 24mts | 15 KVA | 1 | 3 |
| 17 | Velapalayam | 39 | 20-2No<br>15-1No<br>10-1No | -do- | 28mts | 82.5 KVA | 1 | 3 |
| 18 | Pooluvapatty | 18.37 | 25 | HSC | 40mts | 40 KVA | 1 | 3 |
| 19 | Perichipalayam OLD (IInd Scheme) | 88.2 | 120 | Mono block | | 160 KVA | 1 | 2 |
| 20 | Thorripalayam | 14.7<br>11.2 | 20<br>15 | Mono block | 28mts | 50 KVA | 1 | 2 |
| 21 | Neruperichal | 14.7<br>22.35 | 20<br>10-Nos | Mono block | 28mts | 82.5 KVA | 1 | 2 |
| 22 | Mannarai (Parappalayam) | 29.4 | 40 | Mono block | 28mts | 62.5 KVA | 1 | 3 |
| 23 | Nallur | 22.05<br>29.40 | 30<br>40 | HSC | 40mts<br>40 mts | 100 KVA | 1 | 3 |
| 24 | Thotti Mannarai | 11.02 | 7.5-<br>2 Nos | Mono block | 28mts | 50 KVA | 0 | 3 |
| 25 | Cheran Nagar | 11.02<br>18.37 | 15<br>12.5-2 | Mono block | 28mts | 125 KVA | 1 | 3 |
| 26 | Kuppandampalayam | 29.4<br>22.05 | 10-4<br>30-1 | Sub-pumpset | 28mts<br>40mts | 100 KVA | 0 | 3 |
| 27 | Veerapandi | 14.7<br>5.51<br>9.18 | 20<br>7.5<br>12.5 | Sub-pumpset | 28mts | 82.5 KVA | 1 | 3 |
| 28 | Murugampalayam | 18.37<br>3.67 | 25<br>5 | HSC-pumpset | 40mts<br>28mts | 62.5 KVA | 0 | 2 |
| 29 | Andipalayam | 11.02<br>14.7 | 15<br>20 | Sub-pumpset | 28mts | 82.5 KVA | 0 | 2 |
| 30 | Chinna Andipalayam | 5.51<br>9.18<br>7.35 | 7.5<br>12.5<br>10<br>10 | Sub-pumpset | 28mts | 50 KVA | 1 | 3 |
| 31 | Mannarai ( On line Booster) | 9.18 | 12.5 | Mono Block | 28mts | 25 KVA | 1 | 2 |
| 32 | Iduvampalayam | 18.37 | 25 | HSC-pumpset | 40mts | 40 KVA | 0 | 2 |
| 33 | KVR Nagar | 14.7 | 20 | HSC-pumpset | 28mts | 40 KVA | 1 | 2 |
| | TOTAL | | | | | | 27 | 80 |

மேற்கண்டவாறு செயல்திறன் உதவியாளர் நிலை 1ல் 46 பணியாளர்களும், செயல்திறன் உதவியாளர் நிலை 2ல் 256 பணியாளர்களும் ஆக மொத்தம் 625 பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். தற்போது பற்றாக்குறையாக உள்ள பணியிடங்களில் 80 எண்ணிக்கையிலான செயல்திறனற்ற பணியாளர்களை கொண்டு மாற்றுப் பணிஅடிப்படையில் குடிநீர் விநியோகப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**744 -ன் தொடர்ச்சி**

ஒருங்கிணைந்த திருப்பூர் மாநகராட்சியின் 4 மண்டல அலுவலகங்கள் செயல்பட 1074 புதிய பணியிடங்கள் தோற்றுவிக்க மாமன்றத் தீர்மானம் நிறைவேற்றி முன்மொழிவுகள் அனுப்பப்பட்டதில் நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களது கடிதம் ந.க.எண்.45580 / 2012 / மாநஅ.1, நாள் 16-07-2013ல் பொதுப்பணி பொறியியல் பொது சுகாதாரம் மற்றும் அடிப்படை பணிகள் உட்பட்டு கூடுதலாக 408 பணியிடங்கள் மட்டும் தோற்றுவிக்க அரசுக்கு பரிந்துரை செய்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக ஆணையாளரால் பரிந்துரை செய்து அனுப்பி வைக்கப்பட்டுள்ள பணியிடங்களில் மாநகர பொதுப் பணிகளுக்கு தலா இரண்டு வார்டுகளுக்கு ஒரு செயல்திறன் உதவியாளர் நிலை-1 பணியிடங்களும், ஒரு வார்டுக்கு ஒரு செயல்திறன் உதவியாளர் நிலை 2 பணியிடம் வீதம் 60 பணியிடங்களும் தலைமை நிலைய துலக்குநர் பணியிடம் 14 மட்டுமே திருத்திய அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட பணியிடமாக தோற்றுவிக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

தலைமை நிலையம் வழியோர நீருந்து நிலையங்கள் மற்றும் மாநகர நீர்த்தேக்கத் தொட்டிகளில் பணியாற்ற கூடுதலாக பணியிடங்கள் தோற்றுவிக்கப்படாத நிலையில் மாநகருக்கு குடிநீர் உந்தும் பணியும், மாநகர மக்களுக்கு சீராக குடிநீர் விநியோகம் செய்யும் பணியும் தடைபட வாய்ப்புள்ளது. எனவே நகராட்சி நிர்வாக ஆணையாளர் பரிந்துரை செய்து அனுப்பியுள்ள பணியிடங்களைத் தவிர மாநகராட்சி பகுதிகளில் குடிநீர் விநியோகம் சீர் செய்ய கீழ்க்கண்ட பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

| வ.எண். | பணியிடம் | மாநகர குடிநீர் விநியோகம் |
|---|---|---|
| 1 | செயல்திறனற்ற பணியாளர் | 80 |
| | மொத்தம் | 80 |

மேற்குறிப்பிட்ட பட்டியலில் தற்போது மாநகரில் சீரான குடிநீர் விநியோகம் மேற்கொள்ள மிகவும் அத்தியாவசியமான கீழ்க்கண்ட பணியிடங்கள் தேவைப்படுகிறது.

| வ.எண். | பணியிடம் | மாநகர குடிநீர் விநியோகம் |
|---|---|---|
| 1 | செயல்திறனற்ற பணியாளர் | 80 |
| | மொத்தம் | 80 |

இப்பணிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயம் செய்துள்ள விலை விபரப்படி Out sourchingமுறையில் பணியாளர்களை நியமித்து பணிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. Out sourching முறையில் பணியாளர்களை நியமித்து குடிநீர் விநியோகப் பணியினை மேற்கொள்ளும் போது தற்போது இப்பணியில் ஈடுபட்டு வரும் துப்புரவு பணியாளர்களை அவர்களது அசல் பணிக்கு திருப்பி அனுப்பலாம். இதனால் மாநகரின் திடக்கழிவு மேலாண்மைப் பணியினை மேம்படுத்த இயலும்.

Out sourching முறையில் தற்போது குடிநீர் விநியோகப் பணிக்கு தற்போது அவசியம் தேவைப்படும் 80 பணியாளர்களை நியமனம் செய்தால் ஏற்படும் செலவினம் கீழ்கண்டவாறு மதிப்பிடப்பட்டுள்ளது.

**744 -ன் தொடர்ச்சி**

| வ. எண் | பணியிடம் | எண்ணிக்கை | மாவட்ட ஆட்சித் தலைவர் விலைவிகித அடிப்படையில் தினக்கூலி ரூ. | செலவினம் ரூ. | மாநகராட்சி பணியாளர்களின் ஊதிய விகிதம்படி வழங்கப் பட வேண்டிய மாதாந்திர ஊதியம் ரூ. | மொத்த செலவினம் ( எட்டு மாதத்திற்கு) ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | செயல்திறனற்ற பணியாளர் | 80 | 341 | 6820000 | 19000 | 12160000 |
| | | **80** | | **6820000** | **19000** | **12160000** |
| 2. | தொழிலாளர் வருங்கார வைப்பு நிதி 13.85% | | | 944570 | | |
| 3 | GST & மற்றும் பாதுகாப்பு 18% உபகரணங்கள் | | | 1227600 | | |
| 4 | சீருடை செலவினம் | 80 | ஆண்டொன்றுக்கு ரூ.1000 வீதம் (எட்டு மாதத்திற்கு) | 54000 | | 54000 |
| 5 | Over head Charges 10.00% | | | 682000 | | |
| 6 | Surrender | | | | 3033 | 999600 |
| 7 | L.S. | | | 71830 | | |
| 8 | Grand Total | | | 9800000 | | 12456640 |

மேற்காணும் 80 பணியிடங்களுக்கும் ஊதிய விகித அடிப்படையில் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டால் ஊதியம் மற்றும் இதர செலவினங்களுக்கு எட்டு மாதத்திற்கு 124.57 இலட்சம் செலவாகும். ஆனால் மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயம் செய்த தினக்கூலி அடிப்படையில் பணியாளர் நியமனம் செய்யப்பட்டால் ரூ.98.00 இலட்சம் செலவாகும். இதனால் செலவினத்தில் ரூ.26,56,640/- மீதமாகும்.

இதனால் எட்டு மாதங்களுக்கு ரூ.26.57 இலட்சம் மாநகராட்சிக்கு சேமிப்பு ஏற்படுவதுடன் மாநகராட்சி பகுதியில் குடிநீர் விநியோகம் சீராக விநியோகம் செய்ய இயலும். எனவே முதலாவது குடிநீர் தொட்டி இயக்குதல் மற்றும் குடிநீர் விநியோக பராமரிப்பு பணிக்கு தற்காலிக அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்ணயித்த விலைவிகித அடிப்படையில் OUTSOURCING முறையில் 01-10-2019 முதல் 31-05-2020 வரை எட்டு மாதத்திற்கு பணியாளர்களை நியமித்து பணிகளை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றம் அனுமதிக்கலாம். (இ.1 / 4806 / 2018 )

------

**தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது**

------

**745)** திருப்பூர் மாநகராட்சியில் 2011-12 முதல் 2015-16 ஆம் ஆண்டு வரை ஒப்பந்ததாரர்களால் செய்து முடிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு தணிக்கை தடை எழுப்பப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர்கள் பணி செய்து முடித்து 3 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதால் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகைகள் காலங்கடந்த வைப்பு தொகை கணக்கிற்கு கொண்டு செல்லப்பட்டுவிட்டது. எனவே கீழ்க்கண்ட ஒப்பந்ததாரரின் வைப்புத் தொகையை காலங்கடந்த வைப்புத் தொகையிலிருந்து ஈடுசெய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

திருவாளர்கள்

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை ரூ. | | வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை ரூ. | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | S.R.P.& Co, | .. | 3387/- | 13. | .வி.பி.அழகையன் | .. | 46586/- |
| 2. | ராஜா கன்ஸ்ட்ரக்சன்ஸ் | .. | 115264/- | 14. | கே.கணேசன் | .. | 45357/- |
| 3. | ராஜா கன்ஸ்ட்ரக்சன்ஸ் | .. | 142539/- | 15. | கே.கணேசன் | .. | 71493/- |
| 4. | சுமதி | .. | 15610/- | 16, | எஸ்..செல்வராஜ் | .. | 77160/- |
| 5. | S.K.Construction | .. | 32731/- | 17. | ஆர்.நாகராஜ் | .. | 60758/- |
| 6. | பி.ராமசாமி | .. | 42484/- | 18. | ஆர்..நாகராஜ் | .. | 173271/- |
| 7. | கிருத்திகா கன்ஸ்ட்ரக்சன்ஸ் | .. | 36121/- | 19. | ராஜேஸ்குமார் | .. | 59962/- |
| 8. | சிவராம் அன் கோ,, | .. | 71742/- | 20. | ராஜேஸ்குமார் | | 36286/- |
| 9. | சுபம் அசோசியேட்ஸ் | .. | 51087/- | 21. | மதுரைவீரன் | | 150056/- |
| 10. | அக்ரி இன்டஸ்ட்ரீஸ் | .. | 39708/- | 22. | ஆண்டவர் கன்ஸ்ட்ரக்ச்ன் | | 28033/- |
| 11. | அக்ரி இன்டஸ்ட்ரீஸ் | .. | 48910/- | 23. | எம்.டி.வேலுமணி | | 5561/- |
| 12. | எஸ்.செல்வராஜ் | .. | 24328/- | | | | |

**அலுவலகக் குறிப்பு** : அனுமதி வழங்கலாம். ( பி.5 / 171 / 2016)

-------

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது

------

**746)** திருப்பூர் மாநகராட்சி மண்டலம் -3, வார்டு எண்.31-ல் உள்ள டவுன்ஹால் வளாகத்தினுள் ஸ்மார்ட் சிட்டி 2018-19 திட்டத்தின் கீழ் ரூ.5200.00 இலட்சம் மதிப்பீட்டில் Convention Centre கட்டுவதற்கு அந்த வளாகத்தினுள் உள்ள டவுன்ஹால் கட்டிடம், Press Club, எட்டு கடைகள் போன்றவைகளை இடிப்பதற்கு மாமன்ற தீர்மானம் 614 நாள் 30-07-2019-ல் ஒப்புதல் அளித்துள்ளது. அதன் பேரில் தற்போது டவுன்ஹால் கட்டிடம் அதன் தென்புறம் கிழமேல் சுற்றுச் சுவர் இடிக்கப்பட்டுள்ளது. மேற்காண் இடிக்கப்பட்ட கட்டிடத்தில் உள்ள கருங்கற்கள், இரும்பு கோப்புகள், கதவுகள், ஜன்னல்கள், AC sheet ( பழுதடைந்து பயனற்றவைகளை தவிர்த்து ) போன்ற சாமான்களை பொது ஏலம் நடத்தி விற்பனை செய்து அத்தொகையினை மாநகராட்சி நிதியில் சேர்த்திட மாமன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம்.

------

## தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது

------

**747)** திருப்பூர் மூன்று குடிநீர் திட்டங்களில் நீரேற்று, நீருந்து மற்றும் மேல்நிலைத் தொட்டிகளை இயக்குதல், விநியோகித்தல் மற்றும் பராமரிப்பு பணிக்கு தேவையான செயல்திறனற்ற பணியாளர்கள் 80 எண்ணிக்கை, இரவுக் காவலர்கள் 18 எண்ணிக்கை மற்றும் கிளீனர்கள் 9 எண்ணிக்கை போன்ற ஆக மொத்தம் 107 பணியாளர்களை தனியார் நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் 01-11-2019 முதல் 31-03-2020 வரை ஐந்து மாதங்களுக்கு திருவாளர்.ஸ்ரீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மென்ட் சர்வீசஸ் (பி) லிமிடெட் நிறுவனத்தாருக்கு அதே ஒப்பந்தப்புள்ளியில், ஒப்பந்ததாரருக்கு அதே ஒப்பந்த விலை விகிதத்தில் 107 பணியாளர்களை பெற ஒப்பந்தத்தினை நீட்டிப்பு செய்து கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.45.00 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மாமன்றம் தனது 163ம் எண்ணிட்ட 29-11-2017ம் தேதிய தீர்மானத்தில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர் ஸ்ரீனிவாஸ் வேஸ்ட் மேனேஜ்மெண்ட் சர்வீசஸ் (பி) லிமிடெட் சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதால் மேற்காண் ஒப்பந்தத்தினை மேலும் 5 மாதங்களுக்கு 01-10-2019 முதல் 31-03-2020 வரை கால நீட்டிப்பு செய்து கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காண் செலவினத்தை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

(இ.1 / 5929 / 2018)

----.-

## தீர்மானம் : அலுவலகக் குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது

------

**748)** திருப்பூர் மாநகராட்சி நான்கு மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருவிளக்குகளை PPP ஒப்பந்த அடிப்படையில் திருவாளர்.ஸ்நெல் எனர்ஜி எக்யூப்மென்ட்ஸ் பி.லிமிடெட், கோவை மற்றும் திருவாளர்.சால்ஜர் எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட், கோவை ஆகிய இரு நிறுவனங்கள் மூலம் பத்து ஆண்டு காலத்திற்கு ஒப்படைத்து இயக்கி பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்தெருவிளக்குகளுக்கு ஒப்பந்த பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளவாறு பராமரிப்பு தொகை ESCO நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது. மாமன்றம் தனது 705 ஆம் எண்ணிட்ட 21-11-2014ஆம் தேதிய தீர்மானத்தில் திட்ட பணி மேற்கொள்ளவும் பத்து ஆண்டுகளுக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் முதல் இரு வருடங்களுக்கு ஆகும் பராமரிப்பு செலவினத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. மூன்றாவது வருடத்திற்குரிய பராமரிப்பு செலவினத்திற்கு மாமன்றம் தனது 162 ஆம் எண்ணிட்ட 29-11-2017 ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதி வழங்கியுள்ளது. மேலும், நான்காவது வருடத்திற்குரிய பராமரிப்பு செலவினத்திற்கு மாமன்றம் தனது 344 ஆம் எண்ணிட்ட 17-10-2018 ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதி வழங்கியுள்ளது. இச்செலவினத்தின் கால வரம்பு செப்டம்பர் -2019 ஆம் தேதியுடன் முடிவடைகிறது. எனவே, மாநகராட்சியில் உள்ள 31950 எண்கள் தெருவிளக்குகளில் 90W. 120W மற்றும் 150W மின்திறனை 1727 எண்கள் LED மின்விளக்குகளுக்கு பராமரிப்பு செலவினம் ஒப்பந்தத்தில் விலைவிகிதத்தில் குறிப்பிடப்படாததாலும், நிர்ணயிக்கப்படாததாலும் பராமரிப்பு பணியினை இந்த ஒப்பந்தம் மூலம் மேற்கொள்ள வழிவகையில்லை. எனவே மீதமுள்ள 3023 எண்கள் தெருவிளக்குகள் மற்றும் மின்சேமிப்பு உபகரணங்கள் ( October 2019 to September -2020 ) அக்டோபர் 2019 முதல்

**748-ன் தொடர்ச்சி**

செப்டம்பர் 2020 முடிய ஓராண்டு காலத்திற்கு பராமரிப்பு மேற்கொள்ளவும் ஒப்பந்த பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள மூன்றாம் ஆண்டுக்குரிய விலை விகிதத்தின்படி தெருவிளக்குகளின் பராமரிப்பு தொகை விபரம் கீழ்க்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

| Sl. No | Description | Quantity | Rate / Quantity (in Rs.) | Estimate (in Rs.) |
|---|---|---|---|---|
| 1 | SVL (70)w Sodium Vapur lamps | 14 | 788 | 11032 |
| 2 | SVL (150)w Sodium Vapur lamps | 164 | 945 | 154980 |
| 3 | SVL (220)w Sodium Vapur lamps | 4098 | 1155 | 4733190 |
| 4 | MHL (250)w Metal halide lamps | 496 | 1575 | 781200 |
| 5 | MHL (400)W | 615 | 2100 | 1291500 |
| 6 | SVL (130)W Sodium Vapur lamps | 735 | 945 | 694575 |
| 7 | CFL -11W | 42 | 105 | 4410 |
| 8 | CFL-22W | 2 | 210 | 420 |
| 9 | T5 | 533 | 840 | 447720 |
| 10 | CFL – 1 x 36W | 672 | 263 | 176736 |
| 11 | CFL – 2 x 36W | 1269 | 525 | 666225 |
| 12 | CFL – 3 x 36W | 7 | 788 | 5516 |
| 13 | CFL – 4 x 36W | 81 | 1050 | 85050 |
| 14 | 15 W LED | 18617 | 53 | 986701 |
| 15 | 40w x 4 feet Tube Light | 2706 | 300 | 811800 |
| 16 | Street light Controllers | 916 | 1995 | 1827420 |
| 17 | Voltage controller 1 ph 4 KVA | 972 | 2415 | 2347380 |
| 18 | Voltage controller 1 ph 6 KVA | 291 | 2625 | 763875 |
| 19 | Voltage controller 1 ph 8 KVA | 153 | 2835 | 433755 |
| 20 | 9 KVA Voltage Controller 3ph | 25 | 2940 | 73500 |
| 21 | 12 KVA Voltage Controller 3ph | 10 | 3045 | 30450 |
| 22 | 15 KVA Voltage Controller 3ph | 5 | 3150 | 15750 |
| 23 | 21 KVA Voltage Controller 3ph | 15 | 3255 | 48825 |
| 24 | CCMC | 1 | 210000 | 210000 |
| 25 | ILM Device | 2177 | 105 | 228585 |
| | **TOTAL** | **34616** | | **16830595** |
| | LS for unforeseen Items | | | **19405** |
| | **TOTAL** | | | **16850000** |

**748-ன் தொடர்ச்சி**

எனவே 34616 எண்கள் தெருவிளக்குகள் அக்டோபர் 2019 முதல் செப்டம்பர் 2020 முடிய மேற்காண் ஒப்பந்த விலைவிகிதத்தின்படி ஓராண்டு காலத்திற்கு ஆகும் உத்தேச பராமரிப்பு செலவினம் ரூ.168.50 இலட்சங்களுக்கு மாமன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :

(அ) மாமன்றம் மேற்காண் செலவினத்திற்கு அனுமதி வழங்கலாம்.

(இ.1/266/2012)

------

**தீர்மானம் : அனுமதி வழங்கப்பட்டது**

------

(ஒம்) க.சிவகுமார், எம்.ஏ.,
தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர்,
திருப்பூர் மாநகராட்சி.

// **உண்மை நகல்** //

ஆணையருக்காக,
திருப்பூர் மாநகராட்சி.